# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 10 • 27.01.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


## தமிழர்களை பலவீனமடையச் செய்யும் திட்ட நகர்வுகளை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும்

தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர் விஜயகுமார் நவநீதன் சிறப்பு பேட்டி






## மன்னார் மனிதப் புதைகுழி ஆய்வில் உண்மைகள் வெளிவருமா?

தமிழ்நாட்டைச் சேர்ந்த தடயவியல் மருத்துவத்துறை பேராசிரியர் சேவியர் செல்வ சுரேஷ் அவர்கள் சிறப்பு பேட்டி



## கூட்டமைப்பு அரசுக்கு வழங்கிய ஆதரவுக்கு கிடைத்த பரிசு, நீராவியடி புத்தர் சிலையும் செம்மலை பௌத்த விகாரையுமே!

- சிவசக்தி ஆனந்தன் எம்.பி



## இனவழிப்பில் கைகோர்த்த இங்கிலாந்து இந்நிலை இனிமாறுமா?

சுடரவன்








## அநீதிகளை வெளிக்கொணர்ந்ததாலேயே ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

# பிரியங்க பெர்னான்டோவை பாதுகாக்க களமிறங்கும் சிறிலங்கா இராணுவம் இலண்டனில் முறையீடு செய்வதற்குத் திட்டம்

இலண்டனில் உள்ள சிறிலங்கா தூதரக பாதுகாப்பு ஆலோசகராக முன்னர் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ மீதான நடவடிக்கையை திரும்பப் பெறக் கோரி, மான்செஸ்டர் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சிறிலங்கா இராணுவம் முறைப்படியான முறையீடு ஒன்றைச் செய்யவுள்ளது.



இலண்டனில் உள்ள சிறிலங்கா தூதரகத்தின் ஊடாக இந்த முறையீடு செய்யப்படும் என சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ ஒரு கொண்டாடப்படும் போர் வீரர் என்றும், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கைவிடுமாறும், சிறிலங்கா இராணுவம் முறையீடு செய்யும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

வரும் பெப்ரவரி 1ஆம் நாள் பிரிகேடியர் பெர்னான்டோவுக்கு எதிரான வழக்கு இலண்டன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அன்றைய நாள் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை மீளப் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்த விவகாரம் இராஜதந்திரம் தொடர்பான மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்று கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டௌரிசிடம், சிறிலங்கா அதிகாரிகள் தகவல்களை பரிமாறியுள்ளதாக, வெளிவிவகாரச் செயலர் ரவிநாத ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

முறையாக நியமிக்கப்பட்ட இராஜதந்திரி என்ற வகையில், பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவின் இராஜதந்திர விலக்குரிமையை உறுதிப்படுத்துமாறு தாம் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இந்த நீதிமன்ற நடவடிக்கை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்தின் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பு அரசுக்கு வழங்கிய ஆதரவுக்கு கிடைத்த பரிசு, நீராவியடி புத்தர் சிலையும் செம்மலை பௌத்த விகாரையுமே!

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவு கிராம மக்களின் தொடர் போராட்டம் நேற்றைய தினம் 698 நாட்களை கடந்துவிட்ட நிலையில், காணிவிடுவிப்பு, மீள்குடியேற்றம் தொடர்பாக அரசு தரப்பில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் பொறுமையிழந்துவிட்ட மக்கள், தமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேப்பாபுலவை சேர்ந்த 104 குடும்பங்களுக்கான 171 ஏக்கர் காணிகளை டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் விடுவித்து மீளக்குடியமர அனுமதிப்பதாக வழங்கிய வாக்குறுதியும் மீறப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் குமுறுகின்றனர்.

இந்தநிலையில் 26.01.2019 அன்று கேப்பாபுலவு மக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினார். காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி அளித்துள்ள வாக்குறுதி மீறப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய சிவசக்தி ஆனந்தன் எம்.பி, இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரிவித்து கேப்பாபுலவு மக்களின் காணிகளை விடுவிக்க ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்தினார்.

இக்கோரிக்கைக்கு பதிலுரைத்த ஆளுநர், ஜனாதிபதி அவர்கள் தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பியவுடன் காணி விடுவிப்பு தொடர்பாக அவருடன் பேசி சாதகமான ஒரு பதிலை தருவதாக தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் லண்டன் இணைப்பாளர் சஜீந்திரா ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர். தொய்வுறாத நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாபுலவு மக்களை சந்தித்த சிவசக்தி ஆனந்தன் எம்.பி, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கடந்த நான்கு வருடங்களாக அரசாங்கத்திற்கு வழங்கி வரும் நிபந்தனையற்ற ஆதரவுக்கு கிடைத்த பரிசே நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையும், செம்மலை பிரதேசத்தில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பௌத்த விகாரையும் என்று விசனம் தெரிவித்தார்.

# போர்க் குற்றங்களும் கிடைக்காத நீதியும்...

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா. அமைதிப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ் கண்டித்துள்ளார். இத்தாக்குதலில் இரண்டு சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டு ஆறு பேர் காயமடைந்தனர். இதனை ஒரு போர்க் குற்றமாகவும் அன்ரனியோ குட்டரெஸ் வர்ணித்துள்ளார்.

ஐ.நா. படையினர் தாக்குதலுக்குள்ளாவது இதுதான் முதல்தடவையல்ல. இதுவரையில் பன்னாட்டுப்படையினர் 180 பேர் வரையில் மாலியில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். மாலியில் சிறிலங்கா படையினர் தாக்குதலுக்கு இலக்கா—யிருப்பது இது முதல்முறையாக இருக்கலாம்.

"ஐ.நா. அமைதிப்படையினரை இலக்கு வைக்கும் தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களின்படி போர்க் குற்றங்களாகக் கருதப்படும்" என்று கூறியுள்ள ஐ.நா. பொதுச் செயலர், இந்தத் தாக்குததலின் சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு விரைவில் நீதியின் முன்நிறுத்த வேண்டும் என்று மாலி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதாகவும் கூறியுள்ளார்.

செயலாளர் நாயகம் சொல்வதைப் போல அமைதிப் படையினரை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவது போர்க்குற்றமாக இருக்கலாம். சிறிலங்கா படையினர் எதற்காக அங்கு அனுப்பட்டார்கள் என்பதும் ஆராயப்பட வேண்டும். உண்மையாகவே மேற்கு ஆபிரிக்காவில் அமைதியை நிலைநாட்டுவதும், அதற்குரிய பங்களிப்பை வழங்குவதும்தான் சிறிலங்காவின் நோக்கமாக — அக்கறையாக இருந்ததா?

2009 இல் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்திலே தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட கொலைகளிலும், போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டதாக சிறிலங்கா படை—யினர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மூலமாகவும் இது குறித்த விசாரணைகள் நடத்தப்பட்டது. அந்தக் காயங்களிலிருந்து வன்னி இன்னமும் மீளவில்லை. சிறிலங்கா அரசின் இந்த கொடூரங்கள் சர்வதேச ரீதியாகவும் அம்பலமாக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கறையைத் துடைப்பதற்கு ஐ.நா. போன்ற பெருமை மிக்க படைப் பிரிவுகளில் தமது படையினரை ஈடுபடுத்துவது சிறிலங்கா அரசின் திட்டமாக இருந்தது. இதன் மூலம் படையினருக்கு நல்ல பெயரைத் தேடிக்கொள்ளலாம் என சிறிலங்கா கணக்குப்போட்டுச் செயற்பட்டது.

உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச அமைப்பின் பணிப்பாளரான யஸ்மின் சுக்கா இது தொடர்பில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. "2009 இல் பாரியகொடூரங்களில் சம்பந்தப்பட்ட, போர்க் குற்றவாளிகள் எனக்குறிப்பிடப்படும் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகள், அதற்காகப் பொறுப்புக்கூறப்படாத நிலையில் பெருமை மிக்க ஐநா பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றார்களள்" என யஸ்மின் சுக்கா குறிப்பிட்டிருந்தார்.

இப்போது கொல்லப்பட்ட சிறிலங்கா படையினருக்கு ஐநா செயலாளர் நாயகம் அனுதாபம் தெரிவித்திருப்பதும், அதனை ஒரு போர் குற்றமாக வர்ணித்திருப்பதும் சிங்கள அரசுக்கு சர்வதேச ரீதியாகக் கிடைத்துள்ள ஒரு வெற்றியாகவே கணிக்கப்படும்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் செயற்பாடுகளால்தான் லண்டனில் போர்க் குற்றவாளியான பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கு ஆபிரிக்காவில் பணியாற்றிய மற்றொரு இராணுவ அதிகாரி திருப்பி அனுப்பப்பட்டார். புலம்பெயர்ந்த தமிழர்களின் செயற்பாடுகள் சர்வதேச அரங்கில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

மார்ச் ஜெனீவா கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்த வேண்டிய நிலையில் தமிழர்கள் உள்ளனர். வன்னியில் படிந்த இரத்தக் கறையை ஐநா படையில் இணைவதன் மூலம் துடைத்துக்கொள்வதற்கு சிறிலங்கா வகுக்கும் உபாயங்களையும் தகர்த்தெறிவது அவசியம். அதற்காகவும் தமிழர்கள் திட்டமிட்ட முறையில் செயற்பட வேண்டும்.

மாலியில் கொல்லப்பட்ட படையினருக்கு நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தும் ஐநா செயலாளர் நாயகம் ஈழத்தில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவாரா? அதற்கான அழுத்தங்கள் அவசியம்!

# மன்னார் மனிதப் புதைகுழி ஆய்வில் உண்மைகள் வெளிவருமா?

## தமிழ்நாட்டைச் சேர்ந்த தடயவியல் மருத்துவத்துறை பேராசிரியர் சேவியர் செல்வ சுரேஷ் அவர்கள் சிறப்புப் பேட்டி



ஈழத் தமிழர்களின் நிலைமைகள் குறித்து அறிந்துகொள்ளும் நோக்குடன் தமிழகத்தை சேர்ந்த நிபுணர் குழுவினர் அண்மையில் ஈழத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்தார்கள். சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் பேராசிரியர் இராமு.மணிவண்ணன் தலைமை—யிலான இந்த குழுவில் தமிழ்நாட்டை சேர்ந்த தடயவியல் துறைநிபுணரும் பேராசிரியருமான சேவியர் அவர்கள் பங்கெடுத்திருந்ததோடு தற்போது உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள மன்னார் மனிதப் புதைகுழியையும் இவர் பார்வையிட்டிருந்தார். மன்னார் புதைகுழி குறித்து இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு பேட்டி.

**ஈழத்தின் நிலைமைகளை அறிவதற்காக தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் குழு அண்மையில் அங்கு பயணம் மேற்கொண்டபோது அந்த குழுவில் தடயவியல் நிபுணராக நீங்கள் பங்கெடுத்திருந்தீர்கள். குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியை பார்வையிட்டுள்ளீர்கள். அங்கு நீங்கள் அவதானித்த விடயங்களை கூறமுடியுமா?**

மன்னாரில் நூற்றுக்கணக்கான மனித உடலங்கள் புதைக்கப்பட்ட ஒரு புதைகுழி உள்ளது என்பது அவ்விடத்தில் வணிக வளாகம் கட்டமுயன்ற போது வெளிவந்துள்ளது. புதைகுழி விவகாரம் அங்குள்ள மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் பெரும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியதனால் புதைகுழியை ஆய்வு செய்யும் நிலைமை உருவாகியதாக அறிந்தோம். இவ்வாறான ஆய்வுகளின்போது தடயவியல் ரீதியாக தடய ஆய்வுப்பகுதி எல்லை வரையறுக்கப்படுவது என்பது முதலாவது படிமுறையாகும்

எனினும் இப்புதைகுழியின் ஆய்வுப்பகுதி வரையறுக்கப்பட்டதற்கான காரணமாக அந்த புதைகுழியின் தலைமை ஆய்வு நிபுணர் திரு. ராஜபக்ச எங்களிடம் கூறிய கருத்து ஏற்புடையதல்ல. முதலாவதாக எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்ட இடத்தில் மத சடங்குகள் நடந்ததற்கான தடயம் காணப்பட்டதாகவும் அது மயானமாக இருக்குமெனக்கூறி அங்கிருந்து ஆய்வை தொடங்காமல் அதன் நேர் எதிர்புறம் குழியை தோண்ட ஆரம்பித்துள்ளார்கள். அவ்வாறு அவர்கள் நிர்ணயித்து தோண்டிய குழியின் சாலையோரப்பகுதி விளிம்புகளில் எலும்புக்கூடு இன்றளவும் வெளித் தெரிகிறது. ஆகவே புதைகுழியின் எல்லை இன்னும் சாலைக்குக்கீழ் பரந்திருக்க வாய்ப்புக்கள் உள்ளன. குறைந்த பட்சம் 10 அடி தூரமாவது எலும்புக்கூடு இல்லை என உறுதி செய்யப்பட்ட பின்னர்தான் புதைகுழி ஆய்வு எல்லை வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மன்னார் மனிதப் புதைகுழி ஆய்வு எல்லை இவ்வாறு வரையறுக்கப்படவில்லை. மேலும் அந்தச்சாலை போருக்கு பின் போடப்பட்ட சாலை என்பதும் சாலைக்கு மறுபுறம் இன்றளவும் பல ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ராணுவ முகாம் உள்ளது என்பதும் உரிய தடயவியல் பொறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதையே காட்டிநிற்கின்றன

**அங்கு புதைகுழி தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் அதனை சரியான முறையில் ஆவணப்படுத்தும் திறமையை கொண்டுள்ளனரா? உதாரணமாக புதைகுழியில் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் என்பவற்றை சரியாக ஆணவப்படுத்துதல், புகைப்படங்கள்,குறிப்புக்கள் எடுத்தல் கொல்லப் பட்டவர்களை அடையாளம் காணுதல் போன்றவை சரியாக மேற்கொள்ளப்படுகின்றதா?**

மன்னாரில் நடைபெறும் புதைகுழி ஆய்வில் ஒரு தடயவியல் மருத்துவர், ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் மட்டுமே உள்ளனர். மற்றும் தடயவியல் நீதித்துறை மருத்துவர்தான் மன்னார் மருத்துவமனையில் தன் அன்றாட பணியினை முடித்துவிட்டுத்தான் இங்கு ஆய்வுக்கு வருவதாகவும் கூறுகிறார். ஆகவே இந்த ஆய்வுக்கு பிரத்தியேகமான தனிக்குழு இல்லை என்பது இதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது. அங்குள்ள உதவியாளர்கள் புகைப்படம் எடுக்கின்றார்கள். ஆனால் தொடர் நிகழ்வுகளை வீடியோ எடுக்காதது ஆய்வின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது. எலும்புக்கூடுகளிலிருந்து பெறப்படும் அடிப்படை தகவல்களான பாலினம் மற்றும் வயது என்பவற்றைக்கூட கண்டுபிடிக்க தன்னால் முடியாது எனவும் அது சோதனைக்கூட ஆய்வின் மூலம்தான் தெரியும் என அத்தலைவர் கூறுவது தடயவியல் துறையில் அவரின் பயிற்சியின்மை மற்றும் முதிர்ச்சியின்மையை தெளிவுபடுத்துகிறது.

**படுகொலை செய்யப்பட்டவர்களை இனம் காணுவது என்பது மிகவும் முக்கியமான பணியாகும், அதாவது அவர்களின் மரபணு (DNA), வன்கூட்டு தடயங்கள் மற்றும் உடமைகளைக்கொண்டே இது மேற்கொள்ளப்பட வேண்டும். அதனை மேற்கொள்ளும் தகமையும் சுயாதீனத்தன்மையும் அகழ்வை மேற்கொள்ளும் குழுவிடம் உள்ளதா?**

மரபணு சோதனைகள் ஆய்வுக்கூடத்தில் நடைபெறும் ஒன்று. அந்த ஆய்வகம்



→ பேராசிரியர் சேவியர் செல்வ சுரேஸ் அவர்கள் மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ச அவர்களிடம் மனிதப் புதைகுழி குறித்து தகவல் அறிந்தபோது அருகில் தமிழகத்தை சேர்ந்த மக்கள் கண்காணிப்பகத்தின் தலைவர் கென்றி–திபேன் பேராசிரியர் குழந்தைசாமி பேராசிரியர் அரசேந்திரன்; ஆகியோர் உள்ளனர்.

மன்னாரிலேயே இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் அனைத்து எழும்புக்கூடுகளையும் ஏனைய தடயங்களையும் கொழும்பில் உள்ள தடயவியல் ஆய்வகத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவித்தனர். மன்னாரில் வெறும் எலும்புக்கூடு சேகரிக்கும் பணி மட்டும்தான் நடைபெறுகிறது.

**இறந்த ஒரு மனிதரின் முடியை வைத்தே அவரின் மரணம் குறித்து உண்மையை கண்டறியுமளவிற்கு இன்று விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட நிலையில் 300 இற்கும் மேற்பட்ட மனித வன்கூடுகளை வைத்து மனிதப் புதைகுழி குறித்து உண்மை நிலையை கண்டறிவதில் உள்ள தடங்கல்கள் என்ன?**

உண்மை நிலையை கண்டறிவதில் உள்ள நடைமுறைத் தடங்கல்களாக நான் கருதுவது ஆய்வுக்குழுவின் நடுநிலமையின்மை, தெளிவான ஆய்வு மனப்பான்மையின்மை, தடயவியல் துறையில் போதிய பயிற்சியின்மை மற்றும் அரசியல் தலையீடுகள் குறிப்பாக இலங்கையின் நீதித்துறையின் அணுகுமுறைகள் போன்ற நிலைமைகளை வைத்துப் பார்க்கும்போது உண்மையை வெளிக்கொண்டுவரும் என்பது கேள்விக்குறியே.

**இதுபோன்ற பல மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகத்திலே உள்ளது என்ற உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவை தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சிறீலங்கா அரசு அனுமதி வழங்குமா? அல்லது அதற்குரிய அழுத்தங்களை அனைத்துலக சமூகம் ஏற்படுத்துமா?**

சிறீலங்கா அரசு தாமாக முன்வந்து



தொடர்ச்சி 4 ஆம் பக்கம் →

# நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை அச்சுறுத்திய இலங்கை இராணுவமும் பொலிசாரும்.



கேப்பாப்புலவு மக்கள் தமது சொந்த நிலத்தை விடுவிக்க கோரி முன்னெடுத்த போராட்டத்தை தடுத்து நிறுத்தும் நோக்குடன இலங்கை இராணுவம் மற்றும் பொலிசார் இணைந்து மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கேப்பாப்புலவு மக்கள் தமது நில மீட்பு போராட்டத்தை 687 ஆவது நாளாக நேற்று சனிக்கிழமை இராணுவ முகாம் முன்றலில் மேற்கொண்டிருந்தனர். அப்போது அந்த இடத்துக்கு வந்த பொலிசார் இராணுவமுகாமுக்கு முன்னால் போராட்டம் செய்யக்கூடாது என்றும் பழைய கொட்டகைக்குள்ளே சென்று போராட்டத்தை நடத்துங்கள் எனவும் கூறி அச்சுறுத்தியுள்ளனர்.

ஆனால் மக்கள் அந்த இடத்தை விட்டு நகர மாட்டோம் என உறுதியாக தெரிவித்த பின்னர் பொலிசார் நீதிமன்ற தடை உத்தரவு எடுத்துவந்து இராணுவமுகாமிற்கு முன்னால் போராட்டம் செய்யமுடியாது என தெரிவித்து மக்களை விரட்டினர். இராணுவ முகாம் வாசலில் இருந்து 75 மீற்றர் தூரத்திற்கப்பால் மக்களை செல்லுமாறு தெரிவித்து தூர இடைவெளியை அளவு நாடாமூலம் அளந்து விட்டுள்ளார்கள். இதேவேளை நேற்று இரவு மக்கள் போராட்ட இடத்தில் இருந்தபோது இராணுவமுகாமின் வளாகத்திலும் வீதியிலும் மக்களை அச்சுறுத்தும் வகையில் மின் விளக்குகள் அணைக்கப்பட்டது. அதன் பின் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் குப்பி விளக்கின் உதவியுடன் இரவு வேளையை கழித்துள்ளனர்.

எது எவ்வாறு இருந்தாலும் தமது நிலத்தை விடும்வரை தாம் இதே இடத்தில் போராட்டத்தை தொடருவோம் என்றும் எமது கோரிக்கையை உணர்ந்து எமக்காக குரல்கொடுத்து எமது காணியை மீட்க உதவவேண்டும் எனவும் கேப்பாப்புலவு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வடக்கு கிழக்கில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் - விமல் வீரவன்ச



புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டால் அது விடுதலைப் புலிகளின் தமிழீழக் கனவை நனவாக்கியமைக்குச் சமனாகும். இந்த நிலைமை ஏற்பட்டால் வடக்கு கிழக்கில் மீண்டும் இரத்த ஆறு ஓடும். தமிழ் மக்கள் மீளவும் பேரவலங்களைச் சந்திக்க வேண்டிவரும். இவை வேண்டுமெனில் புதிய அரசியலமைப்பு அரசு நிறைவேற்றட்டும்.” இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளினால் நாடாளுமன்றத்துக்கு வந்த சம்பந்தனும் சுமந்திரனும் இன்று தமிழர்களுக்குத் துரோகம் செய்துள்ளார்கள். இருவரும் போலி வாக்குறுதிகளை வழங்கி தமிழர்களை ஏமாற்றி வருகின்றார்கள். ரணில் அரசைக் காப்பாற்றி வருகின்றார்கள். என்று அவர் சூளுரைத்தார்

3ம் பக்கம் தொடர்ச்சி

## மன்னார் மனிதப் புதைகுழி ஆய்வில் உண்மைகள் வெளிவருமா?




இந்த ஆய்வுகளைச் செய்யும் என்று நான் கருதவில்லை. காரணம் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பிலிருந்து தனது படையினரை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் சிறீலங்கா அரசு தீவிரமாக முன்னெடுத்துவரும்போது தனக்கு புதிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ளும் என்பது சந்தேகமே. தமக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடிய தடயங்களை அழிப்பதில் சிறீலங்கா அரசு ஈடுபடும் என்பதை அதன் வரலாற்றிலிருந்து நாம் உணரமுடியும். ஆனால் அங்குள்ள அரசியல் மற்றும் சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள், புலம்பெயர் தமிழர்கள் மனித உரிமை தளத்திலே குரலைக்கொடுக்கும் மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்திற்கு அழுத்தம்கொடுத்தால் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

**மன்னார் மனிதப்புதைக்குழி தொடர்பான ஆதாரங்கள் வெளிவரும்போது அது தற்போதைய அரசின் நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமா? அல்லது அனைத்துலக சமூகத்தின் நகர்வுகளின் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்துமா?**

ஆதாரங்கள் சரியாக வெளிக் கொண்டுவரப்படும்போது, உண்மை சர்வதேச அரங்கில் உறுதிப்படுத்தப்படும் இதனால் அனைத்துலக சமூகத்தின் நகர்வுகளில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அவ்வாறான நிலைமையை தமிழ் மக்கள்தான் உருவாக்க வேண்டும்

**றுவாண்டாவில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழி அனைத்துலக மட்டத்திலும், ஐக்கிய நாடுகள் சபையிலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் மூலம் அங்கு ஒரு இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது என்பதையும் அனைத்துலக சமூகம் ஏற்றுக் கொண்டிருந்தது. அதேபோல மன்னார் புதைகுழி உள்ளிட்ட தமிழர் பிரதேசத்தில் காணப்படும் ஏனைய மனிதப் புதைகுழிகள் தொடர்பான தகவல்களை தமிழர் தரப்பு எவ்வாறு கையாள வேண்டும் என நீங்கள் எண்ணுகின்றீர்கள்?**

உலக வரலாற்றில் நீதிநெறிமுறைக்கு உட்பட்ட அரசியலினூடாக சாதிக்க முடியாதது என்று ஒன்றும் இல்லை. ஆகவே தமிழர் பிரதேசங்களில் காணப்படும் மற்றும் சந்தேகிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் விடயத்தில் அங்குள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சிறீலங்கா அரசிற்கு கடுமையான அழுத்தத்தை கொடுக்க வேண்டும். தமிழர் பிரதேசத்தில் காணப்படும் மன்னார்,செம்மணி உள்ளிட்ட அனைத்து மனிதப் புதைகுழிகள் விடயத்திலும் நீதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான முயற்சியில் தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனே கவனம் செலுத்த வேண்டும். தங்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்த தமிழ் இனத்துக்கு அவர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். இந்த வரலாற்றுக் கடமையிலிருந்து எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் பின்வாங்கினால் வரலாறு அவர்களை ஒருபோதும் மன்னிக்காது.

**பயணத்தின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்களை சந்தித்திருந்தீர்கள். அவர்கள் தமிழக அரசிடமும் தமிழகத்தில் உள்ள ஏனைய கட்சிகளிடமும் முன்வைத்த கோரிக்கை என்ன?**

பயணத்தின் போது தமிழர் தாயக பூமியாக விளங்கும் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு சென்றிருந்தோம். முதலில் மன்னார் புதைகுழியை பார்வையிட்டோம். பின்னர் நாங்கள் வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட பல்வேறு தமிழ் அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளையும் சந்தித்தித்திருந்தோம். இதுவரை தமது உரிமைப் போராட்டத்திற்கு தாய்த் தமிழகம் ஆற்றிய பங்களிப்புக்களை அவர்கள் நன்றியுடன் நினைவுகூர்ந்த அதேவேளை 2009 இறுதி யுத்தத்தில் தாங்கள் தாய்த் தமிழகத்தை பெரிதும் நம்பியிருந்தோம் என்பதை பலரும் பதிவு செய்தார்கள். தமது பிரச்சனையில் தமிழகத்தின் அரசியல் தலைமைகள் அனைவரும் ஒன்றிணைந்து இன்றுவரை இந்திய அரசிற்கு கடுமையான அழுத்தத்தை தொடர்ந்து வழங்கவில்லை என்றும் ஏனைய பல்வேறு விடயங்களில் தமது ஆதங்கத்தை நியாமனா கோபத்துடனும் உரிமையுடன் முன்வைத்தார்கள்.

சில இடங்களில் தாய்த் தமிழகத்தில் இருந்து இதுவரை தொப்புள் கொடி உறவான பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் உரிமைக்கும் உறவுக்கும் குரல் கொடுக்காததால் ஈழத்தமிழர்களை ஏமாற்றிய சில தமிழக அரசியல்வாதிகளை குற்றம் சாட்டினர். இருப்பினும் இரத்த உறவான எங்களிடம் உரிமையுடன் கோரிக்கைகளை வைத்தனர். பல குடும்பங்களில் நாங்கள் விசாரித்த போது அவர்கள் குடும்பத்தில் போரில் உயிர்நீத்தவர்கள் பற்றி கலங்காமல் வீர மரணம் அடைந்தனர் என்று கூறினர்.

ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி அவர்கள் கூற ஆரம்பிக்கும் போதே அழுகை அவர்கள் தொண்டையையும் வாயையும் அடைத்தது. இன்றும் மனதில் நீங்காத வலி எங்களுக்கு. தாய்த் தமிழகத்திலிருந்து இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து சர்வதேச அரங்கில் இந்த இனப்படுகொலைக்கு ஒரு நியாயமான தீர்ப்பைப் பெற்றுத்தர உதவ கோரிக்கை வைத்தனர். அவர்கள் கோரிகைக்கிணங்க தமிழக அரசியல்வாதிகள் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்கள் என்றும் தமிழ்த் அரசியல் தலைமைகள் இலங்கை அரசிடம் அழுத்தம் கொடுப்பார்கள் என்றும் நாம் நம்பிக்கை வைத்து நாம் சோர்ந்து போகாமல் மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம். நியாயத்தை வென்றெடுப்போம்.

# தமிழர்களை பலவீனமடையச் செய்யும் திட்ட நகர்வுகளை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும்

## தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர் விஜயகுமார் நவநீதன் சிறப்பு பேட்டி

இலக்கு மின்னிதழுக்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு தெரி—வித்துள்ளார். தமிழ் மக்களின் நில அபகரிப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

***முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக கிராமமான நீராவியில் பிள்ளையார் ஆலயத்திற்கு உட்பட்ட சூழலில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்த சம்பவமானது அங்குள்ள மக்களை மாத்திரமன்றி உலகம் எங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி சம்பவத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்.***

வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதி எங்கும் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளும் புத்தர் சிலை வைப்பு நடவடிக்கைளும் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் நீராவியடி பிள்ளையார் ஆலயச்சூழலில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையாது நந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்தது.

வடகிழக்கு மாகாணங்களுக்கிடையிலான பாலமா திகழும் இப்பிரதேசத்தில் மேற் கொள்ளப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் எல்லைக்கிரமங்களில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதனையும் வடகிழக்கு பிரிப்பை நிரந்தமாக்கி தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை நீர்த்துப்போகச் செய்வதையும் இலக்காக கொண்டது. இந்த விடயத்தில் தமிழ் தலைமைகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

***முல்லைத்தீவில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள புத்தர் சிலையானது 27 ஆம் திகதி திறந்து வைக்கப்படவிருந்த நிலையில் அவசரமாக 23 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் 1964 க்கு முன்னர் சீனர்கள் வாழ்ந்ததாகவும் பௌத்த வழிபாடு இடம்பெற்றதாகவும் பிக்குமார் கூறுகிறார்கள். இத்தகைய செயற்பாடுகளின் நோக்கம் என்னவென கருதுகிறீர்கள்?***

### மக்களின் உரிமை போராட்டங்களில் தமிழ் தலைமைகள் காத்திரமான ஒத்துழைப்பை வழங்கவில்லை.

எனது அறிவுக்கெட்டிய வரையிலும், எமது மூதாதையரின் தகவலினடிப்படையிலும் இப்பிரதேசத்தில் எக்காலத்திலும் சீனர்களோ, சிங்களவர்களோ வாழவில்லை என்பதுடன் பௌத்த மதவழிபாடுகள் ஒருபோதும் நடைபெறவில்லை. புதிய சிங்கள குடியேற்றங்களை பொறுத்தவரையில்... முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று வரை 6900 சிங்களவர்கள் குடியேற்றப் பட்டுள்ளார்கள். வெலிஓயா சிங்கள பிரதேச செயலர் பிரிவின் 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் 1984 ஆம் ஆண்டிலிருந்து குடியேற்றப்பட்ட இம் மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி சபை,மற்றும் அனைத்து மத்திய அரச நிறுவனங்கள் விசேட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் பூரண அனுசரணை வழங்குகின்றன. இச் செயற்பாடுகள் எல்லை மாவட்டங்களின் சனத்தொகை பரம்பலை திட்டமட்ட முறையில் கட்டமைக்கப்பட்ட ரீதியில் மாற்றி அமைக்கும் கபட நோக்கம் கொண்டவை.



*அண்மைக்காலமாக தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடனேயே இவ்வாறான செயற்பாடுகள் தமிழர் பிரதேசங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. இது சிங்கள மயமாக்கலுக்கு ஒரு சட்டபூர்வமான வடிவத்தைக் கொடுப்பதற்கான ஒரு முயற்சியாக பார்க்க முடியுமா?*

ஆம் நிச்சயமாக, 2013 ஆம் ஆண்டு வெளி—யிடப்பட்ட ஓர் விசேட வர்த்தமாணி அறி—வித்தலின் மூலம் இலஙகையின் 177 இடங்கள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்கள் வடமாகாணத்தை சேர்ந்தவை. மேலும் பெரும்பாலான இடங்கள் பௌத்த வழிபாட்டின் எச்சங்களாகவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஓர் தற்செயலான நிகழ்வாக பார்க்க முடியாது. வடகிழக்கை பௌத்த மயம் ஆக்குவதனையே நோக்கமாக கொண்ட மறைமுக நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாகவே பார்க்கவேண்டியுள்ளது.



***தமிழர் தாயகத்தில் இன விகிதாசாரத்தை மாற்றும் வகையில் இலங்கை அரசின் குடியேற்றத் திட்டங்கள் எத்த கைய பங்கு வகிக்கிறது என்று கருதுகிறீர்கள்?***

இலங்கை சுதந்திர மடைவதற்கு முன்பிருந்தே தமிழர்களின் மரபுவழித் தாயகமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் குடிப்பரம்பலை திட்டமிட்ட ரீதியில் மாற்றியமைக்கும் நோக்கில் பல சிங்களக் குடியேற்றங்கள் நடந்தேறியமைக்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே 1931—1947ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் 13 சிங்களக்குடியேற்றங்களுடாக 3145 சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள். மேலும் 1948 ฺ 1953 ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் 16 சிங்களக் குடியேற்றங்களுடாக 10,426 சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள். பின்னாளில் இலங்கையின் முதற் பிரதமராக இருந்த D.S சேனநாயக்க 1949 ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்த கல்லோயா திட்டத்தினூடாக தொடர்ச்சியாக மேற்கொளளப்பட்ட சிங்களக்குடியேற்றங்களுடாக கிழக்கு மாகாணத்தின் இனப்பரம்பல் முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட்டதோடு அம்பாறை என்ற புதிய மாவட்டமும் தோற்றம் பெற்றது. இக்குடியேற்றங்கள் வடக்கு கிழக்கு எல்லையான பதவியா வரை திட்டமிட்டு விஸ்தரிக்கப்பட்டது.

1921ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி திருகோணமலையில் 3% ஆகவும், மட்டக்களப்பில் 4.5% ஆகவுமிருந்த சிங்கள மக்கள் தொகை இன்று விஸ்வரூபமாற்றமடைந்திருப்பதற்கு கல்லோயா திட்டமே முக்கிய காரணமாகும். இதன் தொடர்ச்சியாக வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தொடர்ந் தேர்ச்சியான நிலப்பரப்பில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை கேள்விக்குட்படுத்துவதற்கும் வடமாகாணத்தின் சனத்தொகையை திட்டமிட்ட ரீதியில் கட்டமைக்கப்பட்ட அடிப்படையில் மாற்றியமைப்பதற்குமாக முன்மொழியப்பட்டதே மகாவலி ''L'' வலயத்திட்டமாகும்.

***இம்மாவட்டத்தின் இனப்பரம்பலுக்கு மாறாக அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பு நிகழ்வுகளை நிரல்படுத்தி கூற முடியுமா?***

முன்னதாக மக்கள் இடம்பெயர்ந்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களை அண்மித்த சுமார் 2000 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்களும் முந்திரிகைக்குளம், ஆமையன்குளம் உட்பட பல நீர்ப்பாசனக்குளங்கள் கையகப்படுத்தப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கி சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரித்து வெலிஓயா (மணலாறு) என்ற பெயரில் 9 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் வட மாகாணத்தில் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவோடு தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்தியிருந்த மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தற்போது முல்லைத்தீவின் வடக்கின் ஏனைய பகுதிகளுக்கும் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்க முனைகிறது.

1988ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மகாவலி ''L'' வலயத்தைப் பிரகடனப்படுத்திய விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளி—யிடப்பட்டது. இதன் மூலம் முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அனுராதபுர மாவட்டங்களை உள்ளடக்கிய மகாவலி ''L'' வலயம் விசேட அபிவிருத்தி வலயமாகப்

தொடர்ச்சி 9 ஆம் பக்கம் ➔

# இனவழிப்பில் கைகோர்த்த இங்கிலாந்து இந்நிலை இனி மாறுமா?

சுடரவன்

தமிழர்களின் எழுச்சிப் போராட்டத்தை அழிப்பதற்கு சிறிலங்காவுடன் கொண்டிருந்த தொடர்புகள் சம்பந்தப்பட்ட கோப்புகளை பிரித்தானியா அழித்துவிட்டதாக வெளியான செய்தியினை பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு ஒத்துக்கொண்டுள்ளது.

கடந்த 21.01.2019 அன்று இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் மோர்னிங் ஸ்டார் (Morning Star) பத்திரிகையில் இது தொடர்பில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழர்களின் ஆயுதக்கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் சிறிலங்காவிற்கு பிரித்தானியா வழங்கிவந்த ஒத்துழைப்பு உதவிகள் தொடர்பான சுமார் 400 ஆவணக்கோவைகள் பிரித்தானிய வெளியுறவு அமைச்சால் அழிக்கப்பட்டமை ஒரு வரலாற்று நிர்மூலம் என குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன.

முன்னர் வெளியுறவு அமைச்சினால் குறிப்பிடப்பட்ட அளவைவிட இருமடங்கான கோவைகள் அழிக்கப்பட்டமை தற்போது தெரியவந்துள்ளது. இது தொடர்பில் ஆயுத வர்த்தகத்திற்கெதிரான அமைப்பு ( Campaign Against Arms Trade (CAAT))தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.



CAAT பேச்சாளர் ஆண்ட்ரூ ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையில்" இலங்கையில் ஏற்பட்ட மோதல் பேரழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். போரில் பிரிட்டனின் வகிபாகம் அரசாங்கத்திற்கு சங்கடமாக இருக்கலாம். ஆனால் நீதியும் பொறுப்புக்கூறும் தன்மையும் இருந்தால் அது முற்றிலும் வெளிக் கொணரப்பட்டு புரிந்து கொள்ளப்பட வேண்டும்." என்றார்.

"தமிழ் மக்களின் சமத்துவம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்குமான போராட்டத்திற்கெதிராக சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்களுக்கு மேற்குலகு ஆதரவளித்தது. இந்த ஆதரவு இயல்பாகவே வரலாற்றை அழிப்பதற்கும் அதை மாற்றி எழுதுவதற்கும் துணைபோகிறது"என பிரபல பாடகி மாயா அருட்பிரகாசம் மோர்னிங் ஸ்டார் இற்கு தெரிவித்தார்.

பிரித்தானியாவின் இந்த அழிப்பு நடவடிக்கையை மேலும் பல பிரித்தானிய தமிழ் அமைப்புகளும் கண்டனம் செய்துள்ளன.

இவை குறித்த பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல்கள்

இந்த கோப்புக்கள் அழிப்பில் காட்டப்பட்ட அவசரம் எஞ்சியுள்ள கோப்புகளையும் அழிப்பதில் காட்டப்படும் முனைப்பு என்பன பாரிய சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. பிரித்தானியாவின் இத்தகைய ஒத்துழைப்புகள் உதவிகள் என்பன அரசியல் இராசதந்திர படைத்ததுறை நியமங்களுக்கு உட்பட்டதாக இருந்திருப்பின் இந்த கோப்புகளை அழிக்க வேண்டிய அவசியம் அவசரம் ஏற்பட்டிருக்காது.

இந்தவகையில் பிரித்தானியா நீதிக்கு அப்பாற்பட்ட வகையில் அனைத்துலக நெறிமுறைகள் சட்டங்களை மீறிய வகையில் சிறிலங்காவின் இனவழிப்புப் போருக்கு உதவியுள்ளது என்ற ஒரு முடிவுக்குவர வழிசெய்கிறது.

பிரித்தானிய அரசின் இத்தகைய செயற்பாடுகள் போரின் ஆரம்ப காலகட்டத்தில் மட்டுமே இடம்பெற்றன எனக்கூறுவோரும் உண்டு. ஆனால் தமிழருக்கு எதிரான பிரித்தானியாவின் இத்தகைய செயற்பாடுகள் காலனித்துவ காலம் முதல் இன்றுவரை இடம்பெற்றுக் கொண்டிருப்பதே உண்மை நிலையாகும்.

பிரித்தானியா இலங்கையைவிட்டு வெளியேறும்போது தமிழரின் வரலாற்று உரிமையை அவர்களின் அபிலாசைகளை புறந்தள்ளி ஒட்டுமொத்த இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரத்தை சிங்களவர் கையில் கொடுத்துச் சென்றது முதல் தற்போது ஐரோப்பாவில் தமிழரின் உரிமைக்குரலை நசுக்குவதற்காகஅவர்களின் போராட்டங்களை நீர்த்துப் போகச்செய்ய எடுக்கப்பட்டுவரும் பல்வேறு நடவடிக்கைகள் வரை பிரித்தானியாவின் கரம் சிறிலங்கா அரசுடன் இறுக்கமாகப் பிணைந்தேயுள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில் சிறிலங்கா படைத்தரப்புடனான பிரித்தானியாவின் செயற்பாடுகள் பற்றிய சில தகவல்கள் அவ்வப்போது வெளிவந்தன. ஆனால் அவைபற்றி யாரும் அதிகம் அக்கறை கொள்ளவில்லை.

பிரித்தானியாவின் SAS (Special Air Service) மற்றும் கூலிப்படை அமைப்பான கினி மினி (Kini Mini Services)போன்ற அமைப்புகள் சிறிலங்கா படையினருக்கு நேரடியாக அங்கு பயிற்சி வழங்கியது மட்டுமின்றி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தன.

பின்னாளில் இவர்களில் சிலர் தமது நடவடிக்கைகள் குறித்து நூல்களைவெளி—யிட்டிருந்தனர். இவ்வகையில் இலங்கையில் சிறிலங்கா படையினருடன் பணியாற்றிய Tim Smith என்பவர் ஒரு நூலை (Reluctant Mercenary) எழுதியிருந்தார். இந்நூலில் தான் பங்குகொண்ட நடவடிக்கைகள் செயற்பாடுகள் மற்றும் சிறிலங்கா படையினரின் நடவடிக்கைகள் பற்றி அவர் விபரித்துள்ளார். இந்நூலில் படையினரால் நடத்தப்பட்ட பல்வேறு படுகொலைச்சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் ஒளிப்படங்கள் என்பன உள்ளன. இதில் கொலையாளிகளின் படங்களும் உள்ளடக்கம்.

மற்றும் பிரித்தானியாவின் SAS படைப்பி—ரிவில் பணியாற்றிய Andy Mc Nabmmediate Action என்ற நூலிலும் படைப்பயிற்சி தொடர்பில் செய்தி காணப்படுகிறது. அதில் ஓரிடத்தில் ஒரு பிரித்தானிய படைவீரர் இவ்வாறு கூறுகிறார்.

"அவர்களுக்கு எதுசரி எதுபிழை என்பது பற்றிய எந்த புரிதலுமில்லை. அத்துடன் தமிழர்களை அழித்தொழிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறெந்தச்சிந்தனையுமில்லை. நாங்கள் பயிற்சி அளித்தவர்களில் சிலர் கொடூரமான குற்றம் புரிந்தவர்கள்.(They had no understanding right or wrong and thought nothing of wiping out Tamils. Some people we trained committed atrocities. Page -181)"

பிரித்தானியஆய்வாளர் phil.miller எழுதியுள்ள ஆய்வு (Britains Dirty War against Tamil People 1979 - 2009)படைத்துறை மற்றும் இராசதந்திர ரீதியில் பிரித்தானியாவின் வகிபாகத்தை சற்று ஆழமாக ஆதாரங்களுடன் விளக்குகிறது. தனது முன்னுரையில் அவர் இவ்வாறு கூறுகிறார். "இராணுவ வரலாற்றின் வேறுபட்ட பகுதிகளை ஒன்றாக்கி காலவரிசைப்படி பார்ப்போமானால் இலங்கைத்தமிழ் மக்களின்




விடுதலைப்போராட்டத்தை இலங்கை நசுக்குகின்ற ஒவ்வொரு முயற்சியின்போதும் பிரிட்டன் அதனுடன் சேர்ந்துகொண்டு திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக என்னென்ன கொடுமைகளைப் புரிந்தது என்பது விளங்கும். குறிப்பாக சிறிலங்கா போரை வெல்லமுடியாமல் ஊசலாடும் சமயங்களில் வேறுவழியின்றி போர்நிறுத்தத்திற்கும் அமைதி உடன்பாட்டிற்கும் இசைகின்ற சூழல்கள்யாவற்றிலும் பிரித்தானியா அதில் தலையிட்டு அதைக்கெடுத்ததன் தீவிரம் புரியும்."

இவைதான் இன்றுவரை இலங்கை தொடர்பான பிரித்தானியாவின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் பிரித்தானிய தொடர்ந்தும் இருப்பது தமிழ்மக்களுக்கு மேலும் கெடுதலானது. மாக்கிரட்தச்சர் முதல் திரேசா மே வரை பிரித்தானிய அரசாங்கங்கள் இந்த நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும் இனி வரும் நாட்களிலாவது பிரித்தானியா அவ்வாறு நடந்து கொள்ளாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சர்வதேச அமைப்புகள் அரசியல் கட்சிகள் என்று மட்டுமன்றி பிரித்தானியாவின் மக்கள் சமூகத்திடமும் இவ்விடயங்கள் முறையாக கொண்டுசேர்க்கப்பட வேண்டும்.



ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் அவர்கள் எதிர்கொண்ட அரை நூற்றாண்டிலும் மேலான இனவழிப்பு இன்றும் தொடர்கிற திட்டமிடப்பட்ட தமிழர் விரோத நடவடிக்கைகள் பற்றி ஒன்றிணைந்த குரலில் தமிழர்கள் உரத்துப்பேச வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் பிரித்தானியாவில் மட்டுமன்றி தமிழர்கள் வாழுகின்ற தேசங்கள் எங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படவேண்டும். இவற்றை தமிழர்கள் வாழுகின்ற நாடுகள் என்பதற்கு அப்பாலும் நாம் விரிவாக்குவது பயனுள்ளது. உலகெங்கும் எமக்காக நேசசக்திகளை வென்றெடுப்பது காலத்தின் கட்டாயம்.

இழந்த உரிமைகளை நிலைநாட்டவும் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி பெறவும் இத்தகைய செயற்பாடுகள் இன்றைய உலக ஒழுங்கில் தவிர்க்க முடியாதவை என்பது வெளிப்படை.

# கொக்கட்டிச்சோலைப் படுகொலைகளின்-32வது ஆண்டு நினைவேந்தல்

1987ம் ஆண்டு சனவரி 27, 28 ஆம் நாட்களில் அந்த பகுதியில் சிறீலங்காவின் சிறப்பு அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கையின்போது இறால் பண்ணையொன்றில் பணியாற்றிய உள்ளூர் பணியாளர்கள் உட்பட 87 பேர் வரை கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு வாவிக்கு அப்பாலுள்ள அந்த பகுதிக்கு வவுணதீவு மற்றும் பட்டிருப்பு மற்றும் வெல்லாவெளி ஆகிய மும்முனைகளில் நுழைந்த வேளை அந்த பகுதியில் பலருக்கு தொழில் வாய்ப்பு வழங்கிய அமெரிக்க முதலீட்டு இறால் வளர்ப்பு பண்ணை சிறீலங்காப் படையினரின் முற்றுகைக்குள்ளானது.

உள்ளூர் பணியாளர்கள் உட்பட 87 பேர் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு வீதியில் போட்டு எரிக்கப்பட்டனர். இந்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 14



வருடங்களின் பின்னர் 1991 யூன் மாதம் 12ஆம் நாள் இடம் பெற்ற மற்றுமோர் படுகொலைச் சம்பவத்தில் சிறீலங்கா இராணுவத்தினரால் பெண்கள் குழந்தைகள் உட்பட 152 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

# அநீதிகளை வெளிக்கொணர்ந்ததாலேயே ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்

### தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

போர்க்காலத்தில் இடம்பெற்ற அநீதிகளை வெளிக்கொணர முயற்சித்தமையினாலேயே ஊடவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் படுகொலைக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் போர்க்காலத்தில் கொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் பட்டியலில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த 43 தமிழ் ஊடகவியலாளர்கள் உள்ளனர். அதேபோன்று போர் இடம்பெற்ற காலப்பகுதியில் இடம்பெற்ற அநீதிகளை வெளிக்கொணர முயற்சித்த சிங்கள ஊடகவியலாளர்களும் மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.




சிங்கள ஊடகவியலாளரான லசந்த விக்ரமதுங்க போருக்கு எதிரானவர் என்ற காரணத்தினாலேயே அவரது படுகொலை தொடர்பான விசாரணைகள் மந்த கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தினார்.

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30 ஆம் திகதி வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் தொடர்பில் ,இலங்கை அரசு உரிய தீர்வை முன்வைக்க வலியுறுத்தியும் மன்னார் புதைகுழி விவகாரத்தில் விரைவான நீதி கோரியும் சர்வதேச மனித உரிமை பேரவைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியாவில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணிக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் இணைப்பாளர் தேவராசா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

ஐ நா அமர்வின் 40 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது. காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் இனியும் இழுத்தடிப்பு செய்யாமல் இலங்கை அரசு உரிய தீர்வை தர வேண்டும்.

இதற்கு சர்வதேச மனித உரிமை பேரவையில் உள்ள நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மன்னார் புதைகுழி விவகாரத்தில் உரிய நீதியான விசாரணை வேண்டும் என கோரியும் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுக்கவுள்ளோம். எனவே எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்து சிவில் அமைப்புக்கள் மக்கள் பிரதிநிதி ஏற்றத்தாழ்வு பார்க்கால் ஒத்துழைப்பு தர வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு எமக்கு நிறைந்துள்ளது. அதே போல் இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேசத்திலும் எமக்கான ஆதரவை வழங்க வேண்டும்


அந்த வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் வவுனியா பழைய பேரூந்து நிலையத்தில் தமிழினத்தின் தமிழ் மக்களின் தீராத பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவும் மக்களின் இனத்தின் விடிவிற்காக எதுவித பேதமும் குரோதங்களுமின்றி ஒன்றுகூட வேண்டும் என உறவுகள் சார்பாக கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார்.

# மன்னார் மனிதப் புதைகுழி எச்சங்களின் மாதிரிகள் பீட்டா நிறுவனத்திடம் ஒப்படைப்பு

மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட எச்சங்களின் மாதிரிகள் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா நிறுவனத்திடம் கார்பன் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த மாதிரிகள் எந்த காலப்பகுதிக் குரியவை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனையே முன்னெடுக்கப் படவுள்ளது. மன்னார் சதொச கட்டட வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இதுவரை 294 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் தெரிவு செய்யப்பட்ட 6 மாதிரிகள் மேலதிக ஆய்வுகளுக்காக அமெரிக்காவிற்கு எடுத்துச்செல்லப்பட்டன. தொடை எலும்பு மற்றும் பற்களின் மாதிரிகளே ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. கார்பன் பரிசோதனை முடிவுகள் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னார் சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ச காணாமற் போனோர் அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உள்ளிட்ட குழுவினரால் இவை ஒப்படைக்கப்பட்டுள்ளன. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்டத்தரணிகளான வி.நிரஞ்சன் ரனித்தா மயூரன் ஆகியோரும் இந்த குழுவில் இணைந்துள்ளனர்.



# சிறீலங்கா அரசின் நாடுகடந்த பயங்கரவாதத்தினை நாம் முடக்கவேண்டும்

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**





தான் மேற்கொண்ட தமிழினப்படுகொலையை நியாயப்படுத்தி அதனை பயங்கரவாதப் பிரச்சனையாக சித்தரிப்பதற்கு சிறீலங்கா அரசதரப்பு மிகவும் தீவிரமாக இயங்கி வருகின்றது. 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களை முட்கம்பி வேலிகளுக்குள் அடைத்து துன்புறுத்தல்களை மேற்கொண்ட சிறீலங்கா அரசு தமிழ் மக்களை குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் என வேறுபாடின்றி படுகொலை செய்த சிங்களப்படையை வழிநடத்திய தளபதிகளை வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பி அவர்களுக்கு ஒரு சுகபோக வாழ்க்கையை ஏற்படுத்தியதுடன், தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்களை முறியடிப்பதற்கு அனைத்துலக மட்டத்தில் தனது அரச பயங்கரவாத்தையும் கட்டவிழ்த்துவிட்டிருந்தது.

புலம்பெயர் நாடுகளில் இயங்கிய தேசியச் செயற்பாட்டாளர்கள் பலர் சிறீலங்கா அரச உளவுத்துறையினராலும், அவர்களுடன் இணைந்து இயங்கிவரும் தமிழ் குழுக்களாலும் தாக்கப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர், பல தேசிய ஊடகங்கள் வியாபாரிகளின் கைகளுக்கு மாற்றப்பட்டன.

பல வருடங்களாக தேசியத்திற்கு ஆதரவாக செயற்பட்டு தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்ற ஊடகங்களைக் கைப்பற்றுவதன் மூலம் தமிழ் மக்களிடம் புலி நீக்க அரசியல் ஒன்றை மேற்கொண்டு அவர்களின் விடுதலை உணர்வுகளை முறியடிப்பதே சிறீலங்கா அரச புலனாய்வுத்துறையினரின் நோக்கம்.

அது மட்டுமல்லாது போர்க்குற்றவாளிகள் என தமிழ் மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை வெளிநாட்டு தூதரகங்களிலும், ஐக்கிய நாடுகள் சபையிலும் பதவிகளில் அமர்த்துவதன் மூலம். சிறீலங்கா அரசுக்கும் சிங்கள மக்களுக்குமே அனைத்துலக சமூகத்தின் ஆதரவுகள் உண்டு, தமிழ் மக்கள் அனைத்துலக சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்ற தோற்றத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களின் மனவுறுதியை சிதைப்பதே சிறிலங்கா அரசின் நோக்கமாக இருந்தது.

எனினும் சிறீலங்கா அரசின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து தமிழ் மக்கள் தொடர்ந்து போராடியே வருகின்றனர். 2010 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் உள்ள சிறீலங்கா தூதரகத்தில் பணியாற்றுவதற்காக நியமனம் பெற்ற 55 ஆவது படையணியின் முன்னாள் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் பிரசன்னா டி சில்வாவிற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கினால் அவர் தனது பணியை இடையில் நிறுத்தி சிறீலங்காவுக்கு திரும்பப்பெறப்பட்டிருந்தார்.

எனினும் சிறீலங்கா அரசு தனது தோல்வியை மறைப்பதற்காக மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை ஐக்கிய நாடுகள் சபையின் சிறீலங்காவுக்கான பிரதித் தூதுவராக நியமித்திருந்தது. ஆனால் அவரை ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையின் ஆலோசனைக் குழுவில் பணியில் அமர்த்துவதற்கு சிறீலங்கா அரசு மேற்கொண்ட முயற்சியானது, தமிழ் மக்களும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் முன்னாள் தலைவர் நவநீதம்பிள்ளை அவர்களும் மேற்கொண்ட அழுத்தங்களால் தோல்வியில் முடிந்திருந்தது. அவரின் சேவை ஐ.நா அமைதிப்படைக்கு அவசியமற்றது என ஐ.நாவிற்கான கனேடிய பிரதிநிதி லூஜிஸ் பிரச்சே அன்று தெரிவித்திருந்தார்.

அதனைப்போல தென்அமெரிக்க நாடுகளுக்கான சிறிலங்கா தூதுவராக பணியாற்றிய சிறீலங்கா இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியாவுக்கு எதிராகவும் போர்க்குற்ற வழக்குகள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவர் நாடு திரும்பியிருந்தார். 2009 ஆம் ஆண்டு போர் உக்கிரம்பெற்ற போது வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதியாக அவர் பணியாற்றியிருந்தார்.

அதாவது தமிழீழத்தில் சிறீலங்கா அரசு மேற்கொண்ட அரச பயங்கரவாதத்தை அனைத்துலக மட்டத்திற் கொண்டுவருவதற்கு சிறீலங்கா அரசு மேற்கொண்ட பல முயற்சிகள் தமிழ் மக்களின் நடவடிக்கைகளினால் முறியடிக்கப்பட்டுள்ளன.

எனினும் அனைத்துலகத்தில் உள்ள தனது தூதரகங்களுக்கு சிறீலங்கா படை அதிகாரிகளையும், புலனாய்வு அதிகாரிகளையும் அனுப்புவதன் மூலம் தமிழ் மக்களின் செயற்பாடுகளை வேவு பார்த்து அவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு தொடர்ந்து மேற்கொண்டே வருகின்றது.

சிறீலங்கா அரசின் நாடுகடந்த அரச பயங்கரவாத்தின் தொடர்ச்சியே கடந்த ஆண்டு சிறீலங்காவின் சுதந்திரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக தமிழ் மக்கள் மேற்கொண்ட போராட்டத்தை அச்சுறுத்தும் விதமாக சிறீலங்கா இராணுவத்தின் பிரிகேடியர் பிரியங்கா பெர்ணன்டோ மேற்கொண்ட கொலை அச்சுறுத்தலாகும். அதற்கு எதிராக புலம்பெயர் தமிழ் மக்கள் வழக்கு ஒன்றை பதிவுசெய்திருந்தனர். இந்த வழக்கில் சிறீலங்கா இராணுவ அதிகாரி குற்றம் இழைத்தவர் என்ற தீர்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன், அவரை கைதுசெய்யுமாறும் பிரித்தானிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் தமக்கு எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என சிறீலங்கா அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதும், இந்த வழக்கின் வெற்றியானது தமிழ் மக்களுக்கு ஒரு மனவுறுதியை வழங்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதாவது சிறீலங்கா அரசின் நாடுகடந்த அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அஞ்சி ஓடாமல் எதிர்த்துப் போராடினால் வெற்றியீட்டலாம் என்ற தகவல் சொல்லப்பட்டுள்ளது.

அனைத்துலகத்தின் சட்டதிட்டங்களையும், இராஜதந்திர நகர்வுகளையும் நன்கு அறிவதன் மூலம் சிறீலங்கா அரசுக்கு தொடர்ந்து எம்மால் நெருக்கடிகளை கொடுக்கமுடியும் என்பதுடன், அனைத்துலக மட்டத்தில் சிறீலங்காவின் செயற்பாடுகளை முடக்குவதன் மூலம் நாம் ஒரு அரசியல் தீர்வுக்கான அழுத்தங்களையும், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த வழக்கில் பிரித்தானிய அரசு எமக்காக எதனையும் செய்யவில்லை ஆனால் நாம் முன்வைத்த ஆதாரங்களை அவர்களால் நிராகரிக்க முடியவில்லை. எனினும் பல தடவைகள் சிறீலங்கா அதிகாரிகளை வழக்குகளில் இருந்து காப்பாற்றி சிறீலங்காவுக்கே அது பாதுகாப்பாக அனுப்பியிருந்தது.

இதனைப்போல முன்பும் பல தடவைகள் புலம்பெயர் தமிழ் மக்கள் தமது மதிநுட்பத்தால் சிங்களத்தை கலங்கடித்திருந்தனர். 2012 ஆம் ஆண்டு சிறீலங்கா அரச தரப்பு எதிர்பார்க்காத தருணத்தில் சிறீலங்கா இராணுவத்தின் பிரதம போர்க்குற்றவாளியும், ஐ.நாவுக்கான சிறீலங்காவின் பிரதிப் பிரதிநிதியுமான மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா மீது தொடுக்கப்பட்ட வழக்கும், மேற்குலக கூட்டணி நாடு ஒன்றின் ஊடாக சிறீலங்கா அரசு மீது தீர்மானத்தை கொண்டுவர எடுத்த முயற்சியையும் நாம் இங்கு குறிப்பிடலாம்.

ஐ.நாவிற்கான சிறீலங்காவின் பிரதிப் பிரதிநிதியாக உள்ள ஒருவருக்கு அவரின் அலுவலகத்திற்கு அனுப்பப்படும் நீதிமன்ற அழைப்பாணை செல்லுபடியற்றது. எனவே தம்மீது எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது என்ற இறுமாப்பில் மிதந்த சிறீலங்கா அரச தரப்புக்கு அமெரிக்காவின் நீதிமன்ற விதிகளில் உள்ள நுட்பங்களை ஆய்வு செய்து. சவீந்திர சில்வாவின் தனிப்பட்ட வதிவிடத்திற்கு அழைப்பாணையை அனுப்பி, அதனை மத்திய

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

# அதிபர் தேர்தலுக்கு தயாராகுமாறு கோத்தாவுக்கு மகிந்த அனுமதி

அதிபர் தேர்தலுக்குத் தயாராகுமாறு சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச தன்னிடம் கூறியிருப்பதாக சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஞாயிறு லங்காதீப இதழுக்கு வழங்கியுள்ள செவ்வியிலே அவர் இதனைக் கூறியுள்ளார். அமெரிக்க குடியுரிமை பிரச்சினை பெரும்பாலும் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் இந்தச் செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அதிபர் மைத்திரிபால சிறிசேன அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றும் அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதேவேளை கோத்தாபய ராஜபக்சவின் இந்தக் கருத்தை சிறிலங்கா அதிபர் செயலக மூத்த அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. அதிபர் சிறிசேன அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ச ஆதரவு தருவதாக வாக்குறுதி அளித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிட மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறிலங்கா பொதுஜன முன்னணி ஆதரவு தர மறுத்தால் அந்தக் கட்சியுடனான கூட்டணிக்கு வாய்ப்பில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் மகிந்த சமரசிங்கவும் கூறியுள்ளார்.

## தமிழர் விடுதலை கூட்டணியின் அலுவலகம் உடைப்பு!

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலை கூட்டணியின் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல், நடாத்தியுள்ளதோடு, அலுவலகம் உடைக்கப்பட்டு சோதனையும் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் இரவு இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

குறித்த அலுவலகத்தில் இரவு யாரும் இல்லாத சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அலுவலகத்தில் முன் கதவு கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதுடன், அலுவலகத்தின் சில பகுதிகள் அலசி ஆராயப்பட்டுள்ளமைக்கான அடையாளங்கள் தென்படுவதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கின்றார்.

5 ஆம் பக்கம் தொடர்ச்சி

## தமிழர்களை பலவீனமடையச் செய்யும் திட்ட நகர்வுகளை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும்

பிரகடனப்படுத்தப்பட்டது. குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களின் எல்லைக்கிராமங்கள் இதன் இலக்கு கிராமங்களாக காணப்பட்டது.

சிங்களக்குடியேற்றங்களுக்கு சட்டபூர்வமான காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதும் மேலும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதனூடாக சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரிப்பதே மகாவலி ''L'' வலய பிரகடனத்தின் நோக்கமாகும்.

2007 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தலூடாக மகாவலி ''L'' வலய எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டு கடலோடு இணைக்கப்பட்டு முல்லைத்தீவு நகரம் வரை விரிவுபடுத்தப்பட்டது. இவ்வி—ரிவாக்கமானது வடகிழக்கை நிரந்தரமாக துண்;டாடும் கபட நோக்கம் கொண்டது. மகாவலி ''L'' வலயப் பிரதேசத்தில் மகாவலிச்சட்டம் முழுமையாகப் பிரயோகிக்கப்படுமாயின் வடகிழக்கு எல்லைக்கிராமங்கள் தனிச் சிங்களமயமாகும் என்பதோடு தமிழர் தாயகக்கோட்பாடு கேள்விக்குட்படுத்தப்படும்.

**வடக்கு–கிழக்கு தமிழர் பிரதேசங்களின் எல்லை கிராமங்களில் தமிழ் மக்களை மீள குடியமர்த்துவது தொடர்பில் அரசிடம் தெளிவான திட்டம் உள்ளதா? எல்லைக் கிராமங்களில் சிங்களவர்கள் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ள நிலையில் அதை தடுப்பதற்கான தமிழ் தலைமைகளும் சிவில் இயக்கங்களும் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டம் என்ன?**

தற்போது மகாவலி ''L'' வலயம் தொடர்பாகவே அதிகம் பேசப்பட்டாலும் இதற்கு அடுத்தபடியாக மகாவலி ''K'' ''J'' வலயங்கள் தொடர்பான முன்மொழிவுகளும் வெளியாகியுள்ளன.

இதனை கூர்ந்து அவதானிக்கும் போது வட பகுதியை துண்டாடுகின்ற கபட நோக்கம் கொண்ட திட்டமெனத் தெரிகிறது. இது வடக்கின் இனப்பரம்பலை மாற்றியமைத்து தற்போதைய வட மாகாணத்தின் சனத்தொகை 1.1 மில்லியனாகும், மகாவலி திட்ட முன்மொழிவு அறிக்கைப்படி 2030 ஆம் ஆண்டு வடக்கின் சனத்தொகை மகாவலித்திட்டத்தினூடாக 1.8 மில்லியனாக மாற்றமடையும்.

வட மாகாணத்தின் இயற்கையான சனத்தொகை அதிகரிப்பை கருத்தில் கொள்கின்ற போது 2030 ல் சனத்தொகை 7 இலட்சத்தால் அதிகரிப்பது சாத்தியமற்றது. இதன் மூலம் சிங்களக் குடியேற்றங்கள் திரை மறைவில் திட்டமிடப்படுகிறது என்பது தெளிவாகிறது.

ஆகவே வட மாகாணத்தின் குடிப்பரம்பலை திட்டமிட்ட முறையில் கட்டமைக்கப்பட்ட ரீதியில் மாற்றி அதன் மூலம் அரசியல் பொருளாதார ரீதியாக தமிழர்களை பலவீனமடையச் செய்யும் மகாவலித் திட்ட நகர்வுகளை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும்.

**தமிழ்களின் பூர்வீக வாழ்விடங்களை பாதுகாக்கவேண்டும் என்ற சமூகப் பொறுப்புடன் தங்களைப்போன்ற பலரின் கூட்டு முயற்சியில் உருவாகி இன்று தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவை தமிழர்களின் பூர்வீக நிலங்களையும் அடையாங்களையும் பாதுகாப்பதற்கு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?**



முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோரக் கரையோரக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள 8 சிங்கள மீனவர்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கியதனூடாக வடக்கு நோக்கிய நகர்வை மீளவும் ஆரம்பித்துள்ள பின்னணியில் 28 ஆகஸ்ட் 2018 அன்று தமிழர் மரபுரிமை பேரவையினால் அழைப்பு விடுக்கப்பட்டு எவ்வித அரசியல் பேதங்களுமின்றி அனைத்து தரப்பினரின் பங்கேற்புடன் மகாவலித் திட்டத்திற்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முல்லைத்தீவு நகரில் இடம்பெற்றது.

5000 ற்கு அதிகமான மக்கள் கலந்துகொண்ட இவ் எதிர்ப்பு பேரணியானது விடுதலைப்புலிகள் காலத்திற்கு பின்னர் அதிக மக்கள் ஒன்றுகூடிய நிகழ்வாகப் பதிவானது. மக்கள் தாமாகவே முன்வந்து இப்பேரணியில் கலந்து கொண்டமை மகாவலித்திட்டத்தின் பாரதூரத் தன்மையினை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதனைக் காட்டுகின்றது.

மேலும் இவ் எதிர்ப்பு நடவடிக்கையினை பாதிக்கப்பட்ட மக்கள் நிறுத்திவிடப் போவதில்லை. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை கேள்விக்குட்படுத்தும் மகாவலித்திட்டத்தினை பல்வேறு ஜனநாயகப் போராட்டங்களுடாக தொடர்ந்தும் எதிர்ப்பதனூடாக தமிழர்களின் இருப்பையம் அடையாளத்தையும் பாதுகாக்க போராடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

**புத்தர் சிலை விடயத்தில் பிக்குகளுக்கு ஆதரவாக சிங்கள தலைமைகள் குரல் கொடுத்து வருகிறார்கள். இவ்விடயத்தில்; குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று மக்கள் மத்தியில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பில் தங்களின் கருத்து என்ன?**

குறிப்பாக மக்களின் உரிமை போராட்டங்களில் தமிழ் தலைமைகள் காத்திரமான ஒத்துழைப்பை வழங்கவில்லை. புத்தர் சிலை விவகாரம் மாத்திரம் இன்றி பல நில மீட்பு போராட்டங்களிலும் அவர்களின் ஒத்துழைப்பு காத்திரமாக இல்லை. நேரடியாக பாதிக்கப்பட்ட மக்கள் அரசியல்வாதிகள் மேல் கடும் ஆத்திரத்தில் உள்ளார்கள். மக்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்காத அரசுக்கு எமது மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

மக்கள் தமது உரிமைக்காக கடுமையான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். ஆனால் அதில் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு முற்றாக இல்லை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பதே அவர்களின் வேலையாக உள்ளது.

அரசுக்கு எமது தமிழ் தலைமைகள் பலமான அழுத்தங்களை கொடுக்க வேண்டும் அல்லது மக்களின் உரிமைக்காக சிவில் சமூகங்களுடன் இணைந்து ஜனநாயக போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது.

# மட்டக்களப்பில் யானையின் தாக்குதலினால் அவதியுறும் மக்கள்!



மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை பகுதியில் யானையின் தாக்குதல்களினால் வீடுகள் சேதமடைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புற பகுதிகளில் ஒன்றாக கருதப்படும் தாந்தாமலை பகுதியில் உள்ள மக்கள் தொடர்ச்சியாக யானையின் தாக்குதலுக்குள்ளாகிவருவதாக கவலை வெளியிட்டுள்ளனர். இப்பகுதியில் கச்சான் சோளன் நெற்செய்கையில் ஈடுபடும் மக்களே அதிகளவான நிலையில் உள்ளனர்.இந்நிலையில் யானையின் தாக்குதல்கள் காரணமாக உடமைகளை மட்டுமன்றி உயிர்களையும் இழக்கும் நிலையேற்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை வாக்கு வாங்குவதற்கு மட்டும் முண்டியடித்துக்கொண்டுவரும் அரசியல்வாதிகள் பிரச்சினை ஏற்படும்போது பாராமுகமாக இருப்பதாக தாந்தாமலை பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

8 ஆம் பக்கம் தொடர்ச்சி

## சிறீலங்கா அரசின் நாடுகடந்த பயங்கரவாதத்தினை நாம் முடக்கவேண்டும்

கிழக்கை சேர்ந்த அல்ஜசீரா தொலைக்காட்சி மூலம் உறுதிப்படுத்திய தமிழர் தரப்பின் மதிநுட்பம் மிகவும் வியக்கத்தக்க விடயம்.

அதனைப்போலவே சிறீலங்கா இராணுவத்தின் 57 ஆவது படையணியின் முன்னாள் கட்டளை அதிகாரியும், ஜேர்மனி, சுவிற்சலாந்து மற்றும் வத்திக்கானுக்கான தூதுவருமான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மீண்டும் சுவிற்சலாந்து வந்தால் அவர் மீதான போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சுவிஸ் நீதி ஆணையாளர் முன்னர் அறிவித்துள்ளதும் சிறீலங்கா அரசுக்கு பலத்த அடியாக அன்று வீழ்ந்திருந்தது.

இரண்டாவது உலகப்போரின் போது சுவிற்சலாந்து மீது ஹிட்லர் தனது படைகளை ஏவவில்லை, ஏனெனில் போரில் வெற்றிபெற்ற பின்னர் தானும் தனது படைகளும் ஓய்வெடுக்கப்போகும் அழகிய தேசத்தை சிதைத்துவிட அவர் விரும்பவில்லை. ஆனால் அன்று போர் நிறைவடைந்தபோது ஹிட்லர் உயிருடன் இல்லை. எனினும் முள்ளிவாய்க்காலில் 40,000 இற்கு மேற்பட்ட தமிழ் மக்களை, குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் என்ற வேறுபாடு இன்றி படுகொலை செய்த சிறீலங்கா இராணுவத்தின் போர்க்குற்றவாளிகளான படை அணிகளின் தளபதிகளை சிறீலங்கா அரசு திட்டமிட்டே சுவிஸிற்கும், நியூயோர்க்கிற்கும், லண்டனுக்கும் ஓய்வெடுக்க அனுப்பியிருந்தது.

இது தமிழ் மக்களையும், சிறீலங்காவின் போர்க்குற்றங்கள் தொடர்பில் கருத்துக்களை தெரிவித்துவரும் மனிதஉரிமைகள் அமைப்புக்களையும் அவமதிக்கும் செயலாகும். இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் மாற்றமடைந்த உலக விதிகளை தனக்கு சாதகமாக சிறீலங்கா அரசு பயன்படுத்திய போதும், அதில் உள்ள சில நுட்பமான சரத்துக்களை தமிழர் தரப்பும் பயன்படுத்தி சிறீலங்கா அரசின் இனவாதத்தையும், இறுமாப்பையும் சிதறடித்து வருகின்றது.

அதாவது அனைத்துலக மட்டத்தில் நாம் ஒற்றுமையாக முன்னெடுக்கும் அரசியல் மற்றும் இராஜதந்திர நகர்வுகள் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதே உண்மை. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒருங்கிணையும் தமிழ் மக்களின் பலமும் அதற்கு வழியை ஏற்படுத்தும்.

எனினும் சிறீலங்கா அரசு தனது தமிழின விரோதப்போக்கில் பின்வாங்குவதாகத் தெரியவில்லை. 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவில் கொண்டுவரப்பட்டு சிறீலங்கா அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை புறம்தள்ளி வரும் சிறீலங்கா அரசு அனைத்துலக சமூகத்தை அவமதிக்கும் வகையில் போர்க் குற்றவாளியான மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை சிறீலங்காவின் இராணுவத்தளபதியாக நியமித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரில் வைத்தியசாலைகள் மீதும் பொதுமக்கள் மீதும் மீண்டும் மீண்டும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு பெருமளவான பொதுமக்களையும், காயமடைந்த நோயாளிகளையும் படுகொலை செய்ததில் சில்வாவின் பங்கு அதிகம். அது மட்டுமல்லாது சரணடைந்த போராளிகளையும், பொதுமக்களையும் சில்வா தலைமையிலான 58 ஆவது படையணியே அதிகளவில் படுகொலை செய்திருந்தது.



இவரின் நியமனம் தொடர்பில் உலகின் பல தரப்புக்களிடம் இருந்து எதிர்ப்புக்கள் வெளிவந்துள்ளதுடன், அமெரிக்காவும் தனது கவலையை வெளியிட்டுள்ளது. போர்க்குற்றவாளி என ஐ.நா நம்பும் ஒருவரின் நியமனம் அமெரிக்கா மற்றும் சிறீலங்கா அரசுகளுக்கு இடை—யிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்களைப் பாதிக்கும் என அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழு தலைவர் எலியட் ஏஞ் சல் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் சிறீலங்காவின் புதிய இராணுவத்தளபதி வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டால் உடனடியாக கைது செய்யப்படவேண்டும் என நீதிக்கும் உண்மைக்குமான அனைத்துலக அமைப்பின் தலைவரும், மனித உரிமை வழக்கறிஞருமான ஜஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

அவரை கைது செய்து அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு தேவையான பெருமளவான ஆதாரங்கள் உள்ளதாகவும், சிறீலங்கா அரசு குற்றம் புரிந்தவரைத் தண்டிக்காது அவரை கௌரவப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சிறீலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் மரணம் தொடர்பில் தமிழர் ஒருவரை ஜேர்மன் காவல்துறையினர் அண்மையில் கைது செய்துள்ளனர். இதன் பின்னனியிலும் சிறீலங்கா அரசின் புலனாய்வுத்துறையே செயற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனின் இந்த நடவடிக்கையானது மேற்குலகத்தின் மீது கடுமையான நம்பிக்கையீனத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. பெருமளவான ஆதாரங்களை இருந்தும்;, சிறீலங்கா படை அதிகாரிகளையும், அரச அதிகாரிகளையும் தப்பிக்கவிடும் மேற்குலக அரசுகள் தமிழ் மக்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வது கடுமையாக கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

தமிழ் மக்கள் மீது நடவடிக்கை எடுத்துவரும் ஜேர்மன் அரசு ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள தனது பிரதிநிதி மூலம் சிறீலங்கா அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பாக பரிந்துரையை மேற்கொள்ளுமா? என்பதே தமிழ் மக்களின் தற்போதைய கேள்வி

சிறீலங்கா அரசினதும், அதன் புலனாய்வுத்துறை—யினரினதும் அழுத்தங்களே மேற்குலகத்தின் நடவடிக்கையின் பின்னனியில் உள்ளது. தனது பாதுகாப்புச் செலவீனத்தில் பெரும்பகுதியை வெளிநாடுகளில் உள்ள தமது தூதரகங்களின் ஊடாக தமிழ் மக்களுக்குள் ஊடுருவும் பணிகளை மேற்கொள்வதற்கு சிறீலங்கா அரசு செலவிட்டு வருகின்றது.

பல சிங்களப்புலனாய்வாளர்கள் சாதாரண சிங்கள குடிமக்களைப் போலவே வெளிநாடுகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர். முன்னாள் போராளிகளை குறிவைத்தல், தேசிய ஊடகம் மற்றும் ஊடகவியாளர்களை அச்சுறுத்துதல், அவதூறுபரப்புதல், தகவல் சேகரித்தல், தேசிய ஊடகங்களைக் கைப்பற்றுதல் என அனைத்துலக மட்டத்தில் சிறீலங்கா அரசின் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள் ஒரு தேக்கநிலையை அடைந்துள்ளதுடன், தம்மை மறுசீரமைத்துக் கொள்ளும் நிலைக்கும் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனினும் பிரியங்கா பெர்ணான்டோ மீதான வழக்கு சிறீலங்கா புலனாய்வாளர்களினதும், அவர்களுடன் இணைந்து இயங்கும் குழுக்களினதும் நடவடிக்கைக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும்.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரையும் சிறீலங்கா அரசுக்கு அதிக அழுத்தங்களை ஏற்படுத்தும் கூட்டமாக மாற்ற வேண்டிய கடமை உலகத் தமிழ் மக்களுக்கு உண்டு.

சிறீலங்கா அரசு மீதான அழுத்தங்களை ஏற்படுத்தி எமது உரிமைகளை பெறுவதற்கான சிறந்த தெரிவாக தமிழகத்துடன், ஈழத்தமிழ் மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் வலுவான உறவு அத்தியாவசியமானது. சிறீலங்கா அரசுக்கு எதிராக போராடும் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கு தமிழகத்தின் உதவிகள் இன்றியமையாதது.

தாயகத்து அரசியலை பொறுத்தவரையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் தொடர்பாகவோ, சிறீலங்கா அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பாகவோ எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவோ அல்லது எதிர்க்கட்சி என்ற முறையிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

சிங்களக் குடியேற்றம், புத்தரின் அத்துமீறிய குடியேற்றம், முன்னாள் போராளிகளை கைது செய்தல் அல்லது அச்சுறுத்துதல் என வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீது தற்போதும் மறைமுகமாக திட்டமிட்ட இனஅழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. அதனைக்கூட முழுமையாக எதிர்க்கமுடியாத அடிபணிவு நிலையில் கூட்டமைப்பு உள்ளபோது, அவர்களால் எவ்வாறு அரசியல் உரிமைகள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகள் குறித்து பேசமுடியும்?

எனவே தான் புலம்பெயர் தமிழ் மக்கள் தமிழகத்தை தம்முடன் இணைத்துக்கொள்வது, தற்போதைய இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பூகோள அரசியலில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் நகர்வாக அமையும் என கருதப்படுகின்றது.

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ஓர்மத்துடன் போராடும் கேப்பாபுலவு மக்கள்!

தீபச்செல்வன்

இன்றைய நாட்களில் இடம்பெறும் போராடடங்களுடன் கேப்பாபுலவு மக்களின் போராட்டம் 700 நாட்களை கடந்து பயணிக்கிறது. நாட்டின் அபிவிருத்திக்காக மக்கள் நிலத்தை தியாகம் செய்ய வேண்டும் என்று யுத்தம் முடிந்த பின்னர் வன்னி மாவட்ட படைத்தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா ஒருமுறை குறிப்பிட்டார். கேப்பாபுலவு மக்கள் தமது சொந்த இடங்களை மறந்துவிட வேண்டும் என்றும் சொன்னார். இந்தச் சொற்கள் கேப்பாபுலவு மக்களின் போராட்டத்தை மிகவும் உக்கிரமாக்கியதே தவிர, அவர்களின் போராட்டத்தை ஒடுக்கிவிடவில்லை. பாரிய அரச அழுத்தங்கள், அச்சுறுத்தல்களை தாண்டிய நெடிய வெற்றிப் போராட்டத்தை இம் மக்கள் நடத்தி வருவது வரலாற்றுச் சிறப்பானது.

முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகள் ஆகப்போகின்றன என்றால், கேப்பாபுலவை அந்த மக்கள் இழந்து பத்தாண்டுகள் ஆகப் போகின்றன என்றும் அர்த்தம். அத்துடன் இந்த மக்கள் தமது நிலத்திற்காக போராடத் தொடங்கியும் பத்தாண்டுகள் ஆகின்றன என்பதும் இன்னொரு விடயம். எம்மை சுட்டுக்கொன்றாலும் நிலத்திற்கான போராட்டத்திலிருந்து பின் வாங்கப் போவதில்லை என்று உரத்துக் குரல் கொடுக்கும் கேப்பாலவு மக்கள் 680 நாட்களைக் கடந்தும் தமது உக்கிரமான போராட்டத்தை தொடருகின்றனர்.

முல்லைத்தீவு கேப்பாலவு மக்கள் கடந்து வந்த பாதைகள் சொல்லி மாளாதவை. இந்த மக்கள் மேற்கொண்ட போராட்ட வழிமுறை மிகவும் கூர்மையானது. மிகவும் நெருக்கடி கொண்டது. அப்படி நெருக்கடி கொண்ட அந்தப் போராட்டத்தில்தான் உக்கிரமும் மிகுந்திருந்தது. இரவு பகலாக அந்த மக்கள் பனியிலும் வெயிலிலும் மேற்கொண்ட போராட்டம் சாதாரணமானதல்ல. கேப்பாபுலவு என்பது இந்த மக்கள் காலம் காலமாக வாழ்ந்த நிலம். அவர்கள் தம் உதிரத்தை, வியர்வையை கொண்டு உருவாக்கிய நிலம். சொந்த நிலத்திற்காக உயிரையும் விடுவோம் என்று உறுதி பூண்டவ்கள் கேப்பாபுலவு மக்கள்.



கேப்பாபுலவின் பிலக்குடியிருப்பு மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தின் ஊடாக சுமார் எண்பது ஏக்கர் நிலப் பகுதியை இந்த மக்கள் மீட்டிருந்தனர். 2017ஆம் ஆண்டு இதேபோல் ஒரு தை மாத்தில் இந்த மக்கள் தமது போராட்டத்தை பிலக்குடியிருப்பில் ஆரம்பித்தனர். பிலக்குடியிருப்பு விமான படை முகாமின் முன்பாக தகரக் கொட்டில்களில் இருந்து பனியிலும் வெயிலிலும் குழந்தைகளை வைத்துக் கொண்டு இந்த மக்கள் நடத்திய போராட்டம் அவர்களின் பூர்வீக நிலத்தை வெல்ல வைத்தது.

நிலத்தை மீட்காமல் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்று உக்கிரமாக பேசிய பெண்கள்தான் அப் போராட்டத்தின் நாயகிகள். இராணுவமுகாங்களை தகர்க்கும் அனல் கொண்ட அச் சொற்கள் சிங்களப் படைகளை அஞ்ச வைத்தன. ஈற்றில் வென்றுவிட்டன. கேப்பாபுலவில் முதல் அடியை எடுத்து வைத்திருப்பதுவே அதன் முக்கியத்துவம்.

இந்த மக்களுக்கு மாதிரிக் கிராமத்தை அமைத்துக் கொடுத்துவிட்டோம் இந்த கேப்பாபுலவை விட மாட்டோம் என்று இன்று சொல்வதைப் போலவே அன்றும் இராணுவத்தினர் சொல்லினர். ஆனால் அந்த மாதிரி கிராமத்தை பார்த்த பொழுது அது இன்னொரு மெனிக்பாம் முகாமைப்போலவே தெரிந்தது. தடுப்பு முகாங்களில் வாழ்வது என்பது மாபெரும் சித்திரவதையே அங்கும் காணப்பட்டது. சொந்த நிலமே தடுப்புமுகாம் கோலத்திற்கு மாறியிருந்தது. உண்மையில் கேப்பாபுலவு மக்கள் ஒன்றை உறுதியாக தெரிவித்தனர். எமக்கு மாதிரிகள் தேவை—யில்லை. உண்மையான எங்கள் கிராமங்களே தேவை. அதனை திருப்பித் தரும்வரை போராட்டம் தொடரும் என்றனர்.

எங்கள் ஊரில் இருந்திருந்தால் எங்கள் வாழ்வு எப்படி மகிழ்வாகவும் செழிப்பாகவும் இருந்திருக்கும் என்பதையே மீண்டும் மீண்டும் உரைத்தனர். எங்கள் உழைப்பு எல்லாமே எங்கள் காணியில்தான் உள்ளது. வீடு, கிணறு, பயிர்கள், மரங்கள் எல்லாம் நாங்கள் வியர்வை சிந்தி உருவாக்கியவை என்கின்றனர் இந்த மக்கள். இதன் பின்னர், முல்லைத்தீவு கேப்பாபுலவு பிரதான விமானப்படை முகாமின் முன்னால் பாரிய பீரங்கிகளுக்கு முன்னால் அடுத்த கட்டப் போராட்டத்தை இந்த மக்கள் மேற்கொண்டார்கள். சிங்கள இராணுவத்தின் மாபெரும் கோட்டையின் முன்னால் இரவு பகலென மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து கேப்பாலவு ஊடாக நந்திக்கடல் அருகாக, வற்றாப்பளை செல்லும் வீதியை இராணுவத்தினர் மூடி வைத்திருந்தனர். அந்தப் பகுதிக்குள்தான் பாரிய இராணுவ முகாங்களை அமைத்து மக்களின் பல நூறு ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருந்தனர். இதனை எதிர்த்தும் மக்கள் பல நூறு நாட்கள் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். இந் நிலையில் கடந்த 2018ஆம் ஆண்டில் சிங்கள இராணுவத்திடமிருந்து கேப்பலவு மக்கள் அந்த வீதியை மீட்டமை வரலாற்றுச் சிறப்பு மிக்க மற்றுமொரு செயலாகும்.

தற்போது, 104 குடும்பங்களுக்குச் செந்தமான 181 ஏக்கர் காணிகள் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளது. அதனை மீட்கும் போராட்டத்திலும் மக்கள் உக்கிரமாக ஈடுபட்டு வருகின்றனர். 700 நாட்களை கடந்து நிலையில் மீண்டும் அந்த மக்கள் இராணுவ படைமுகாம் வாசலை முற்றுகையிட்டு கவனயீர்ப்புப் போராட்டத்தை நடாத்தியுள்ளனர். எமது பூர்வீக நிலத்தை விட்டு சிங்கள இராணுவமே வெளியேறு என்று மக்கள் உரக்க குரல் கொடுத்துள்ளனர். இம் மாத ஆரம்பத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை இராணுவத்தினர் நவீன கருவிகள் மூலம் படங்கள் எடுத்து அச்சுறுத்தியிருந்த நிலையில் மீண்டும் இந்த வாரமும் மக்கள் போராட்டத்தில் ஈடுபடடுள்ளனர்.

இராணுவமுகாமின் முன்பாக மக்கள் திரண்டு தமது நிலத்தை விட்டு இராணுவத்தை வெளியேறுமாறு குரல் கொடுத்தார்கள். இந்த மக்களை நீதிமன்ற உத்தரவை பெற்று அகற்ற காவல்துறையின் உதவியை நாடியது இலங்கை அரச படை. எனினும் இராணுவமுகாமிற்கும் பொது சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படாமல், போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளமையால், போராட்டத்தை தடுக்க முடியாது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. எனினும் மக்களை சூழ்ந்து காவல்துறையினர் எச்சரித்தனர். எல்லா எச்சரிக்கைகள், வெறுட்டல்களைக் கடந்தும் அந்த மக்கள் தமது உன்னதமான போராடட்டத்தை தொடர்கின்றனர்.




பல கோடி ரூபாய் செலவில், இராணுவ முகாம் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை உடைத்துத் தள்ளிவிட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயரும் போது, மேலும் பலகோடி ரூபாய்களைச் செலவிட நேர்வதனால் இராணுவத்துக்குப் பாரிய நட்டம் ஏற்படுவதாக, சிறிலங்கா இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து கூறியுள்ளார். மக்களின் காணிகளில் பலகோடி செலவழித்து ஏன் கட்டடங்களை நீங்கள் கட்ட வேண்டும். இதெல்லாம் ஏற்றுக்கொள்ளும் காரணங்களா?

ஆனால். ஒரு அங்குலம் நிலத்தையும் இந்த மக்கள் விட்டுக்கொடுப்பதாக இல்லை. நிலத்திற்காக, நிலத்தின் விடுதலைக்கான ஓர்மத்தையும் உறுதியையும் கேப்பாபுலவுமக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். எத்தகைய போராட்ட வடிவத்தை கையில் எடுக்க வேண்டும்? ஈழமெங்கும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை எப்படி மீட்க வேண்டும் என்பதற்கு இந்த மக்களின் உன்னதமான போராட்டம் ஒரு முன்னுதாரணமாய் அமைந்துவிட்டது. விரைவில் இந்த மக்களின் நிலம் முழுவதிலிருந்தும் சிங்கள இராணுவம் வெளியேறும். அதுவரையில் அவர்களின் போராட்டம் ஓயாது என்பது சிங்கள அரசுக்கும் படைகளுக்கும்கூட தெரியும்.

# நாட்டை கொள்ளையடித்தவர்களை விடமாட்டோம்; மதுரையில் இந்திய பிரதமர் தெரிவிப்பு!

நாட்டைக் கொள்ளையடித்தவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்தியே தீருவோம் என இந்தியப் பிரதமர் தமிழ் நாட்டில் வைத்து தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற பாஜக பொதுக்கூட்டத்தில் பேசும்போதே மோடி மேற்கண்டவாறு சூளுரைத்துள்ளார்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டிவைத்தார். மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரிகளில சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் அவர் இன்று தொடங்கி வைத்தார்.

இதனைத்தொடர்ந்து அதே மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாஜக கூட்டத்தின்போது நரேந்திரமோடி பேசினார். மேலும் அவர் கூறுகையில்

”தமிழ் சங்கம் வளர்த்த மதுரைக்கு வரலாற்றில் தனி இடம் உண்டு. பாரம்பரியம் மிக்க இந்த நகரத்தில் உங்கள் முன்பு உரையாற்றுவதில் பெருமை கொள்கிறேன். எனது தலைமை—யிலான மத்திய அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. சுத்தமான இந்தியா உட்பட பல திட்டங்களால் மக்கள் பயன் பெற்று வருகின்றனர். இந்த அரசு மீது ஊழல் புகார் இல்லை. நாட்டை கொள்ளையடித்தவர்கள் யாராக இருந்தாலும் விடமாட்டோம். எங்கிருந்தாலும் அவர்களை



கொண்டுவந்து நீதியின் முன்னர் நிறுத்தியே தீருவோம். ஊழலுக்கு எதிராக நான் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதால்தான் என்னை பதவியில் இருந்து வெளியேற்ற எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியை அமைத்துள்ளன.

வருமானத்தில் நலிந்த பிரிவினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான சட்டம் பற்றி தமிழ்நாட்டில் சிலர் தங்களது ஆதாயத்துக்காக சந்தேகத்தை கிளப்பி வருவது துரதிர்ஷ்டவசமானது. இந்த 10 சதவீத இட ஒதுக்கீட்டால் தற்போது நடைமுறையில் இருக்கும் தலித்துகள் பழங்குடி—யினர் உள்ளிட்டோருக்கான இட ஒதுக்கீட்டு முறையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

தேவேந்திர குல வேளாளர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். இதுகுறித்து பரிசீலிக்குமாறு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தையும் தமிழக அரசையும் கேட்டுக் கொண்டுள்ளேன். அவர்கள் பரிந்துரை அளித்த பிறகு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் படமாகிறது

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி 18இற்க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் 100—வது நாளான கடந்த மே 22ம் திகதி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட பேரணியாக சென்றனர்.

இதில் ஏற்பட்ட கலவரத்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில் 2 பெண்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் திரைப்படமாகிறது. படத்துக்கு “மே 22 ஒரு சம்பவம்“ எனப் பெயரிடப்பட்டுள்ளது. அஹிம்சா புரடக்ஷன்ஸ் சார்பில் இரண்டாவது படமாக “மே 22 ஒரு சம்பவம்” உருவாகிறது.

இதுகுறித்து படத்தின் இயக்குனர் சந்தோஷ் கோபால் பேசுகையில், ‘சமீப காலங்களில் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் சார்ந்த உண்மை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாக்கப்பட உள்ளது. ஜல்லிக்கட்டு, பசுமை வழிச்சாலை படத்தின் தொடர்ச்சியாக இந்தப் படம் உருவாகிறது. தமிழகத்தின் இந்த மூன்று பிரச்சனைகளுக்கும் காரணம், கார்ப்பரேட். இதனால் கார்ப்பரேட் அரசியலை மையப்படுத்தி கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு போராட்டத்தை மையப்படுத்தி நான் இயக்கியுள்ள திரைப்படம் விரைவில் வெளியாகும்” என்றார்.

# இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வரவை கண்டித்து வைகோ ஆர்ப்பாட்டம்




பிரதமர் மோடிக்கு எதிராக மதுரையில் போராடிய மதிமுகவினரை கைது செய்ய முயன்ற பொலிசாருடன் வைகோ வாக்குவாதம் செய்தது பெரிய வைரலாகி உள்ளது. பிரதமர் மோடியின் தமிழக வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து மதுரையில் போராட்டம் நடந்து வருகிறது. மதிமுக சார்பில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ போராட்டத்தில் ஈடுபட்டார். அதேபோல் தமிழ்நாடு பெரியார் திராவிட கழகம், பெரியாரிய அமைப்புகள் சார்பில் போராட்டம் நடந்து வருகிறது.

மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்பு பலூன்களை வைகோ பறக்கவிட்டார். வைகோ தலைமையில் கறுப்புக் கொடி ஏந்தி பலர் போராட்டம் நடத்தினார்கள். இந்த நிலையில் இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிசார் கைது செய்ய முயன்றனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது. பொலிசாருக்கும் மதிமுகவினருக்கு மிடையே பெரிய தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அதன்பின் பொலிசார் மதிமுகவினரை பொலிலீஸ் வாகனத்தில் ஏற்றினர். 50 பேர் வரை பொலிசார் வாகனத்தில் ஏற்றப்பட்டனர். ஆனால் வைகோ அவர்களை இறக்கிவிடுமாறு பொலிசாரிடம் வாக்குவாதம் செய்தார். உடனே அவர்களை இறக்கிவிடுங்கள் என்று அவர் பொலிசுக்கு எச்சரிக்கை விடுத்தார். இதன் பின்னர் பொலிசார் அவர்களை இறக்கிவிட்டனர். இதையடுத்து மதிமுகவினர் மீண்டும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# வறுமையில் வாடும் எனக்கு அரசு உதவ வேண்டும் - பத்மஸ்ரீ விருது பெற்ற சின்னப்பிள்ளை வேண்டுகோள்



இந்திய அளவில் பெண்களின் சுய தொழில் முன்னேற்றம் மற்றும் மகளிர் வாழ்வியல், சமூக வளர்ச்சிக்காக பாடுபட்டு வரும் மதுரையை சேர்ந்த சமூக சேவகி சின்னப்பிள்ளை (வயது 67). இவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்துள்ளது.

விருது கிடைத்தது குறித்து சின்னப்பிள்ளையிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:—

எனக்கு விருதுகள் என்பது புதிது அல்ல. தமிழக அரசிடம் கடந்த ஆண்டு ஔவையார் விருது வாங்கினேன். இப்போது பத்மஸ்ரீ விருது கிடைத்துள்ளது. இருந்த போதிலும் முன்னாள் பிரதமர் வாஜ்—பாய் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று எனக்கு விருது கொடுத்தது என் வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம்.மதுரை மாவட்டத்தில் கிராமப்புற பெண்கள் சுய தொழில் மற்றும் குடும்ப நிதி தேவையை சீரும் சிறப்புமாக ஈடுகட்டும் வகையில் நாங்கள் கடந்த 1990—ம் ஆண்டு களஞ்சியம் மகளிர் சுய உதவி குழு அமைப்பை தொடங்கினோம்.

இன்றைய காலகட்டத்தில் பெண்களை அதிகம் பாதிப்படைய செய்வது கணவர்களின் மதுப்பழக்கம், மற்றும் சிறு வயது திருமணம் ஆகியவைதான். கணவரின் குடிப்பழக்கம் காரணமாக பெண்கள் இன்றைக்கு குடும்பம் நடத்த முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி பெண்களின் நலனை கருத்தில் கொண்டு மாநிலம் முழுவதும் மதுபான கடைகளை மூட வேண்டும்.

எனக்கு தமிழக அரசு கடந்த ஆண்டு ஔவையார் விருது கொடுத்து கவுரவித்தது. அப்போது முதல்—அமைச்சர் எடப்பாடி பழனிசாமியிடம் தமிழகத்தில் அனைத்து மதுக்கடைகளையும் மூட வேண்டும் என்று கோரிக்கை விடுக்க தயாராக இருந்தேன். ஆனாலும் அதிகாரிகள் என்னை முதல்வரின் பக்கத்தில் செல்லக்கூட அனுமதிக்க மறுத்துவிட்டனர். வறுமையில் வாடும் எனக்கு தமிழக அரசு ரூ. 1000 விதவை உதவித் தொகையை மட்டுமே வழங்குகிறது. மதுரை மாவட்டத்தில் சிறு வயது திருமணம் தொடர்பாக களஞ்சியம் அமைப்புக்கு தகவல் வந்தால் சம்பந்தப்பட்ட பெற்றோரை அழைத்து பேசி அறிவுரை கூறி வருகிறோம். எனக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்தது மகிழ்ச்சி தருகிறது. இது நான் சமூக சேவையில் மேலும் சிறப்பாக செயல்பட தூண்டுகோலாக இருக்கும்.

# அணு ஆயுத ஏவுகணைகளை இரகசியமாக தயாரிக்கிறது சவுதி : அமெரிக்க பத்திரிகை அதிர்ச்சி தகவல்




கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஆயுத ஏவுகணைகளை சவுதி அரேபியா ரகசியமாக தயாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் பல ஆயிரம் கி.மீ.க்கு மேல் பாய்ந்து, இலக்குகளை துல்லியமாக தாக்கக் கூடியவை. உலக நாடுகளில் எந்த நாடும் அணு ஆயுதங்களையும், கண்டம் கண்டம் பாயும் அணு ஆயுத ஏவுகணைகளையும் தயாரிக்கக் கூடாது என்று ஐநா ஒப்பந்தங்கள் தடை செய்துள்ளன. இந்த ஒப்பந்தத்தை மீறி அணு ஆயுதங்களை பரிசோதித்த சீனா, வட கொரியா, ரஷியா உள்ளிட்ட நாடுகள் சர்வதேச அளவில் கடும் கண்டத்துக்கு உள்ளாகியுள்ளன,

இந்நிலையில், சவுதி அரேபியாவும் அணு ஆயுதங்களை ரகசியமாக தயாரித்து வருவதாக அமெரிக்காவில் வெளியாகும் 'தி வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. மேலும், சவுதி அரேபியாவில், ரகசிய இடத்தில் அணு ஆயுத ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு வருவதை காட்டும் செயற்கைக்கோள் புகைப்படங்களையும் அது ஆதாரமாக வெளியிட்டுள்ளது. 'எங்களுடன் பகைமை பாராட்டும் ஈரான் அணு ஆயுதங்களை வைத்திருந்தால், எங்கள் நாடும் அவ்வகை ஆயுதங்களை தயாரிக்க தயங்காது' என்று கடந்தாண்டு சவுதி அரேபியா இளவரசர் முகம்மது பின் சாலமன் கூறியிருந்தார். தற்போது அது அணு ஏவுகணை தயாரிப்பதாக வெளியாகி உள்ள தகவல், அவர் கூறியதை உறுதிப்படுத்துவது போல் உள்ளது. இதற்கான தொழில்நுட்பத்தை சீனாவிடம் இருந்து அது பெற்றிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. அமெரிக்காவின் நட்பு நாடாக சவுதி அரேபியா உள்ளது. அது, அணு ஏவுகணைகளை தயாரிப்பது அமெரிக்கா உடனான உறவை பாதிக்கும் என சர்வதேச அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்

# உணவகத்தில் பரிமாறும் ரோபோக்கள்



ஹங்கேரி நாட்டின் தலைநகரம் புடாபெஸ்டில் ஒரு தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.டி. கம்பெனி) ஒரு கோட்டல் தொடங்கி உள்ளது. அதில் 16 முதல் 20 'ரோபோ'க்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன.

அவை அங்கு சாப்பிட வரும் வாடிக்கையாளர்களுக்கு ஆர்டர் செய்யும் உணவு வகைகளை பரிமாறுகிறது. வேண்டிய பானங்கள் மற்றும் தண்ணீரை சப்ளை செய்கிறது.கோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வழிகாட்டுகிறது. அவர்களுடன் உரையாடுகிறது. குழந்தைகள் மற்றும் பெரியவர்களுடன் நடனம் ஆடி மகிழ்விக்கிறது.

இதனால் கோட்டலுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 'ரோபோக்'களின் சேவை தொடருமானால் மக்களுக்கான வேலை வாய்ப்பில் பாதிப்பு ஏற்படும் என்ற எதிர்ப்பும் எழுந்துள்ளது. அதற்கு பதில் அளித்த ஓட்டல் நிர்வாகம் பணிபுரியும் 'ரோபோ'க்களை இயக்க தொழில் நுட்ப நிபுணர்கள் பலர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என தெரிவித்தனர்.

# பிரேசிலில் அணை உடைந்து 7 பேர் பலி- 150 பேர் மாயம்



பிரேசில் நாட்டில் புரு மாடின்கோ நகரம் அருகே ஒரு தனியாருக்கு சொந்தமான இரும்புதாது சுரங்கம் உள்ளது. அங்கு ஒரு அணை பயன்படுத்தப்படாமல் இருந்தது. அந்த சுரங்கத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அந்த அணை உடைந்தது.உடனே அதில் இருந்த தண்ணீரும் சேறும் வெள்ளமாக பெருக்கெடுத்து வெளியேறியது.

இச்சம்பவத்தில் இரும்புதாது சுரங்கத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த 7 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இவர்கள் தவிர 150 பேரை காணவில்லை. இவர்களில் பலர் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது. எனவே பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.

# பிலிப்பைன்சில் இரண்டு இடங்களில் குண்டு வெடிப்பு : 19 பேர் பலி



தெற்கு பிலிப்பைன்சில் உள்ள தீவு ஜோலோ. இங்குள்ள ரோமன் கத்தோலிக் தேவாலயத்திற்கு அருகில் பயங்கர சத்தத்துடன் இன்று குண்டு வெடித்தது. சிறிது நேரம் கழித்து அரச படைகள் தங்கியிருந்த முகாம் அருகில் மற்றொரு குண்டு வெடித்தது. இதில் அரச படைகள் மற்றும் பொதுமக்கள் என 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். காயமடைந்த 48 பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ''குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் பாதுகாப்பை அதிகரிக்கவும் பொதுமக்கள் கூடும் இடம், வழிபாட்டுத் தலங்களில் உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்'' என்று பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை

# குரங்குகளுக்கும் அடிப்படை உரிமைகள் வழங்கக்கோரி சுவிட்சர்லாந்தில் வாக்கெடுப்பு.



சுவிற்சர்லாந்தின் பேசல் பகுதியில், விலங்குகளுக்கு பாகுபாடு காட்டப்படுவதற்கு எதிராக வாக்கெடுப்பு ஒன்று நடத்தும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

சுவிற்சர்லாந்தின் வலிமையான பார்மசூட்டிக்கல் தொழில்துறை அமைந்திருக்கும் இடத்தில் இந்த திட்டம் முன்வைக்கப்படுவதால் நூற்றுக்கணக்கான குரங்குகள் உயிரிழப்பது தடுக்கப்படலாம்.


2016ஆம் ஆண்டு விலங்குகள் நல அமைப்பு ஒன்று குரங்குகளாலும் திட்டமிட முடியும். நிகழ்வுகளை நினைவில் வைக்க முடியும். வலியையும் உணர்வதோடு தனது உணர்வுகளையும் மற்ற விலங்குகளுடன் பகிர்ந்து கொள்ள முடியும். மற்றும் அவை புத்திசாலித்தனம் மிகுந்தவை என்பதால் அவற்றிற்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரி திட்ட வரைவு ஒன்று முன்வைக்கப்பட்டது.

போதுமான கையெழுத்துக்கள் பெறப்பட்ட நிலையிலும், அது விலங்குகள் பாதுகாப்பு தொடர்பான சுவிஸ் அரசியல் சாசனத்துடன் முரண்படுகின்றது என்று கூறி அந்த வரைவு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது நீதிமன்றம் ஒன்று அந்த வரைவு மீதான தடையை நீக்கியுள்ளது என்றாலும் விலங்குகள் நலன் என்பது சுவிற்சர்லாந்தின் ஃபெடரல் அரசு தொடர்பான விடயம் என்பதால் பேஸலுக்கு பார்மசூட்டிக்கல் நிறுவனங்கள் மீது விலங்குகள் நலன் தொடர்பான தடைகளை விதிக்க அதிகாரம் இல்லை என்று தெரிவித்துள்ள நீதிமன்றம், தனது சொந்த நிறுவனங்களில் வேண்டுமென்றால் விலங்குகள் நலன் தொடர்பான கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ளலாம் என்றும் கூறிவிட்டது.

எப்படியும் வரைவு வாக்கெடுப்பிற்கு விடப்படுவதில் எந்த தடையும் இல்லை என்று அனுமதியளித்து விட்டதால் தற்போது அந்த வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.சுவிற்சர்லாந்து தலைநகரில் உள்ள பேர்ண் வள்ளுவன் பாடசாலையில் தைப்பொங்கல் தமிழ்ப் புத்தாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு, தமிழ்வேந்தன் எல்லாளன் அரங்கில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இதேவேளை குறித்த நிகழ்வில் பேர்ண் வள்ளுவன் பாடசாலை மாணவர்களின் உறவுகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# பக்டீரியாக்களை மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பம்!



நம்மைச்சுற்றி நீக்கமற நிறைந்திருக்கும் பக்டீரியாக்களால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகம். அவ்வளவு ஏன், மனித உடலின் குடல் பகுதியில் பக்டீரியாக்கள் உண்டு. அவற்றிலும் குடலுக்கு நன்மை செய்யும் பக்டீரியாக்களும் உண்டு, தீமை செய்யும் பக்டீரியாக்களும் உண்டு. குடலிலுள்ள நல்ல பக்டீரியாக்களின் எண்ணிக்கையை எப்போதும் அதிகமாக வைத்து பராமரிப்பதற்கு அவசியமான உணவுகள் மூலமாகவே நம் ஆரோக்கியத்தை நாம் பேணிப் பாதுகாக்க முடியும். நம்மை சுற்றியுள்ள தீய அல்லது நோய் ஏற்படுத்தும் பக்டீரியாக்களை அழிக்க மிகவும் சக்திவாய்ந்த ஆன்டிபயாடிக் மருந்துகளை தொடர்ந்து உருவாக்கிவரும் விஞ்ஞானிகள் அதேசமயம், பக்டீரியாக்களால் மனித குலத்துக்கு என்னென்ன நன்மைகள் இருக்கின்றன என்றும் தேடிவருகிறார்கள்.

அத்தகைய தேடுதல்களின் பலனாக பாக்டீரியாக்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வல்லமை படைத்தவை என்று கண்டறியப்பட்டது. முக்கியமாக, ஓட்சிசன் மிகவும் குறைவாக உள்ள சுற்றுச்சூழல்களில் தாக்குப்பிடித்து வாழவே, பக்டீரியாக்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடத்தக்கது. பல்வேறு வகையான பக்டீரியாக்களால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றாலும், அவற்றில் சில பக்டீரியாக்கள் பிற பக்டீரியாக்களை விட சிறப்பாக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடியவை என்று கூறப்படுகிறது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய பக்டீரியாக்களை சோதனைக்கூடத்தில் வைத்து வளர்ப்பது மிகவும் கடினம் மற்றும் அதிகமான செலவு பிடிக்கக்கூடியது என்கின்றனர் ஆய்வாளர்கள். இதன் காரணமாகவே, மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட பக்டீரியாக்களைப் பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பங்களை இதுவரை உருவாக்க முடியவில்லை என்றே விஞ்ஞானிகள் கூறிவந்துள்ளனர்.

ஆனால் மிகவும் சுவாரசியமாக, அமெரிக்காவிலுள்ள எம்.ஐ.டி ஆய்வு மையத்தின் பொறியாளர்களால் சமீபத்தில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய தொழில்நுட்பமானது, அதிக அளவு மின்சாரம் உற்பத்தி செய்யும் பக்டீரியாக்களை அடையாளம் கண்டு, அவற்றை பிற பக்டீரியாக்களிடமிருந்து வெற்றிகரமாக பிரித்தெடுக்கவும் செய்கிறது என்று கூறப்படுகிறது.

அது சரி, பக்டீரியாக்கள் எப்படி மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன ?

ஒரு செல் உயிரியான பக்டீரியாக்கள் தங்களின் உயிரணுவுக்குள் எலக்ட்ரான்களை உற்பத்தி செய்து, பின்னர் உயிரணுச்சவ்வில் உள்ள நுண்ணிய வழித்தடங்கள் வழியாக எலக்ட்ரான்களை வெளியேற்றுவதன் மூலமாகவே மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்த உயிரியல் நிகழ்வு எக்ஸ்ட்ரா செல்லுலர் எலக்ட்ரான் ட்ரான்ஸ்பர் (extracellular electron transfer> or EET) என்று அழைக்கப்படுகிறது.

இதுபோன்ற பக்டீரியாக்களின் மின் உற்பத்தி திறனை நிர்ணயிக்கும் தற்போதைய தொழில்நுட்பங்கள், EET நிகழ்வுக்கு காரணமான EET புரதங்களின் செயல்பாடுகளை அளவெடுப்பதன் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மிகவும் கடினம் மற்றும் அதற்கான நேரம் மிக மிக அதிகம் என்பதாலேயே இதுவரை பாக்டீரியாக்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை என்று கூறப்படுகிறது. சுவாரசியமாக, இரண்டு வெவ்வேறு வகையான பாக்டீரியாக்களின் மின் குணாதிசயங்களின் அடிப்படையில், அவற்றை பிரிக்கும் தொழில்நுட்பத்துக்கு டைஎலக்ட்ரோபோரெசிஸ் (dielectrophoresis) என்று பெயர். மேலும், இதே தொழில் நுட்பத்தின் உதவியுடன் இரண்டு வெவ்வேறு உயிரினங்களின் உயிரணுக்களை பிரித்தெடுக்க முடியும் என்கிறார்கள் பொறியாளர்கள். ஆனால் எம்.ஐ.டி ஆய்வாளர் களின் புதிய ஆய்வில், பக்டீரியாக்களின் மின் உற்பத்தி திறனின் அடிப்படையில் அவற்றை பிரித்தெடுக்க முடியும் என்று உலகில் முதல் முறையாக நிரூபித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக, ஒரு மணிக்குடுவை வடிவத்தில் உள்ள நுண்ணிய வழித்தடங்களில் (hourglass-shaped microfluidic channel) உள்ள பக்டீரியாக்களின் மீது, சிறு அளவிலான மின்னணுவை செலுத்துவதன் மூலமாக, நெருங்கிய தொடர்புள்ள வெவ்வேறு வகையான பக்டீரியாக்களை பிரித்தெடுக்க முடியும் என்கின்றனர் இந்த ஆய்வை மேற்கொண்ட எம்.ஐ.டி பொறியியலாளர்கள்.

அதுமட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட பக்டீரியாவை மின் உற்பத்தி செய்யத் தூண்டும் மன்னளவைக்கண்டு, மற்றும் அந்த பக்டீரியாவின் உயிரணு அளவையும் கண்டறிவதன் மூலமாக, அந்த பக்டீரியாவின் மின் உற்பத்தி திறனை நிர்ணயிக்க முடியும் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். போலரைசபிளிட்டி (polarizability) என்று அழைக்கப்படும் இந்த குணாதிசயம் அதிகமாக உள்ள பக்டீரியாக்கள் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடியவை என்பதும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

முக்கியமாக, மிகச்சிறந்த மின்சார உற்பத்தி திறன்கொண்ட பக்டீரியாக்கள் என்று தற்போதுவரை கருதப்பட்டுவரும் பக்டீரியாக்களின் போலரைசபிளிட்டியை விரைவில் கணக்கிட இருக்கிறது இந்த எம்.ஐ.டி ஆய்வுக்குழு!

ஒருவேளை குறிப்பிட்ட அந்த பக்டீரியாக்களுக்கு அதிக போலரைசபிளிட்டி இருக்கிறது என்று உறுதிசெய்யப்படும் பட்சத்தில், மின் உற்பத்தி செய்யும் பக்டீரியாக்களை மனிதர்களின் மின்சார தேவையை பூர்த்தி செய்யப் பயன்படுத்தலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

# சிங்கப்பூரின் பசுமையான பல்கலைக்கழகம்



அற்புதமான பல கட்டிடக் கலைகளுக்கு சொந்தமான நகரமாக விளங்குகிறது சிங்கப்பூர். நான்யாங் தொழில் நுட்ப பல்கலைக் கழகம் அதற்கு ஒரு ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு. அந்த அழகிய பல்கலைக் கழக கட்டிடத்தின் மேற் கூரை பசுமையான புல்வெளி அமைப்பாய் வடிவமைக்கப்பட்டு இயற்கையும், தொழில் நுட்பமும் ஒன்றாக சங்கமிக்கும் அற்புத காட்சியை நமக்கு விருந்தளிக்கும். மேல்தள கூரை பச்சை பசும் புல்வெளியாக வடிவமைக்கப்பட்டு இருப்பதால், சூரிய வெப்பம் இதனை தாக்காது. மேலும், மழை நீர் சேகரிப்பு தொழில் நுட்ப முறையையும் இந்த பல்கலைக் கழகம் கையாண்டு வருகிறது. இங்கு கலை, வடிவமைப்பு மற்றும் ஊடகம் சம்பந்தப்பட்ட கல்வி பயில்விக்கப்படுகிறது. பசுமை போர்த்த கூரையின் அழகிய கொடையின் கீழ் மாணவர்கள் கல்வி கற்பது என்பது இயற்கையோடு அவர்கள் இணைந்து வாழும் உணர்வை தரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதுபோன்ற பசுமை கட்டிடங்கள் தான் இனி உலகின் தேவை என்பதையும் இந்த கட்டிடம் உணர்த்தத் தவறியதில்லை. சிங்கப்பூரின் காண வேண்டிய இடங்களில் இந்த 5 மாடிக் கட்டிடமும் முக்கியமான ஒன்றுதான். கிழக்கு மேற்கு தடத்தில் உள்ள பூன்லே இன்டொர் சாஞ்சுரூ ல் இருந்து பேருந்து என் 179– ல் ஏறி 10 நிறுத்தங்கள் கழித்து பிளாக் எண் 41 –ற்கு எதிப்புறமுள்ள நிறுத்தத்தில் இறங்கி 36 மீட்டர் நடக்கும் தூரத்தில் இந்த இடம் உள்ளது.